# பாரத மணி

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"—பாரதி


ஆசிரியர்: கே. எஸ். வேங்கடரமணி.




| மாலை 1 | ஞாயிறு 4-12-38 வெகுதான்யஹு கார்த்திகைமீ 19உ | முத்து 10 |
|---|---|---|


## பொருள் அட்க்கம்


| விஷயம் | | பக்கம் |
|---|---|---|
| 1. சமஸ்தானங்களில் தலையிடவேண்டும் | .... | 218 |
| 2. குறிப்பு | ... | 219 |
| 3. மதுவிலக்கு: பரிபூரண வெற்றி (ஸ்ரீ. ஏ. ஜி. வெங்கடாச்சாரி பி. ஏ.) | ... | 221 |
| 4. கிராமப் புனருத்தாரணம் (ஸ்ரீ ரா. குஞ்சிதபாதம் பி. ஏ.) | ... | 225 |
| 5. ஆறுதல் (சிறு கதை) (ஸ்ரீ சி. எஸ். செல்லப்பா) | ... | 227 |
| 6. கீரைக்காரி (சிறுகதை) (ஸ்ரீ ர. வெங்கடசாமி) | ... | 231 |
| 7. புஷ்பவனத்தின் சாரீரம் (ஸ்ரீ ய. மகாலிங்க சாஸ்திரி எம். ஏ., பி. எல்.) | ... | 233 |
| 8. வலை வீச்சு | ... | 237 |
| 9. உதிர்ந்த மணிகள் | ... | 240 |


"பாரத மணி" யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள். ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.



# சமஸ்தானங்களில் தலையிடவேண்டும்

நவம்பர் 25-ம் தேதி வர்தாவில் பேசிய பொழுது டாக்டர் பட்டாபி சீதாராமய்யா சமஸ்தானங்கள் சம்பந்தமாக காங்கிரஸ் தற்காலம் செய்ய வேண்டியதைக் குறித்துக் கூறினார். கொஞ்சகாலமாகவே நாட்டில் அவர் சொல்லுவது போன்ற ஒரு அபிப்பிராயம் வலுத்து வருகிறது. சமஸ்தானங்களின் விஷயங்களில் கலக்காமல் காங்கிரஸ் தனியாக நின்றுகொண்டு சமஸ்தானப் பிரஜைகளின் போராட்டத்தை 'வேடிக்கை' பார்க்கக் கூடாதென்று நாட்டில் அபிப்பிராயம் வளர்ந்து விட்டது.

மாகாணங்களில் சுய ஆட்சி திட்டம் நடைபெறுவதைக் கண்டு சமஸ்தானப் பிரஜைகளுடைய சுதந்திரதாகம் அமோகமாகி விட்டது; இனிமேல் அதை யாராலும் அணைபோட்டுத் தடுக்க முடியாது. நாளுக்குநாள் அது விரிந்து வருகிறது. இன்று ராஜ்கோட்டிலும், திருவாங்கூரிலும், மைசூரிலும், ஐதராபாத்திலும் அக் கிளர்ச்சி பலம் கொண்டு பரவி விட்டது.

561 சமஸ்தானங்களிலிருக்கும் பிரஜைகளும் பிரிட்டிஷ் இந்தியாவிலிருக்கும் பிரஜைகள்போல் உரிமைகள் பெற வேண்டும். அவர்கள் வாழும் பிரதேசங்கள் இந்தியாவில் மூன்றில் ஒருபங்கு விஸ்தீர்ணம்; ஜனத்தொகையோ நாலில் ஒரு பங்கு. சமஸ்தான விஷயங்களில் தலையிடுவதில்லையென்று காங்கிரஸ் ஹரிபுராவில் தீர்மானித்தது. ஆனால் தனிநபர்கள் சமஸ்தானக் கிளர்ச்சிகளில் ஈடுபடலாமென்றும் சுதந்திரம் அளித்தது.

இன்று சர்தார் வல்லபாய் படேலின் தலைமையின்கீழ் ராஜ்கோட் பிரஜைகள் உரிமைக்காகப் போராடுகிறார்கள். அவர்கள் போர் வெற்றிகரமாக முடியுமென்பதில் சந்தேகமில்லை.

காங்கிரஸே இனிமேல் சமஸ்தானங்களின் போராட்டத்தில் தலையிட வேண்டும் என்று டாக்டர் பட்டாபி சீதாராமய்யா வற்புறுத்துகிறார். சமஸ்தானங்கள் வெளியுதவி யின்றி கூடியமட்டில் தங்கள் போராட்டத்தைத் தாங்களே நடத்தி தன்னம்பிக்கை கொள்ள வேண்டுமென்பதும், முழு மனதுடன் அதில் ஈடுபட வேண்டுமென்பதும்தான் காங்கிரஸ் ஹரிபுராத் தீர்மானத்தின் நோக்கமென்று கூறுகிறார்.

சமஷ்டி வந்தாலும் வராவிட்டாலும் சமஸ்தானப் பிரஜைகள் தங்கள் சுதந்திரத்தை அடைய வேண்டியது அவசியம். சமஸ்தானப் பிரஜைகள் முழு ஊக்கத்துடன் போராடும்பொழுது காங்கிரஸ் தன் செல்வாக்கையும் உதவியையும் அளித்து சமரஸம் பேசியோ அல்லது போராட்டத்தை நடத்தியோ கொடுத்தால் நாட்டிற்கே நல்லது.

இரண்டு மூன்று சமஸ்தானங்களில் காங்கிரஸ் தலையிட்டு சமரஸம் பேசி முடித்தால் மற்ற சமஸ்தானங்களில் காரியம் வெகு எளிதில் முடிவடையும். ஆனால் சமஸ்தானங்கள் காங்கிரஸின் சமரஸப் பேச்சிற்கும் லேசில் சம்மதித்து விடமாட்டார்கள். ஆனால் காங்கிரஸ் தலைமை வகித்து விட்டால் சமஸ்தானாதிபதிகள் அடக்கு முறை நடத்தவும், பிரஜைகளின் உரிமைகளைப் பறிக்கவும் முயலமாட்டார்கள். காங்கிரஸை எதிர்த்துப் போராட பிரிட்டிஷ் சாம்ராஜ்யமே யோசிக்கும்பொழுது இந்தச்செல்லரித்துப்போன சமஸ்தானங்கள் எங்கே?

காங்கிரஸ் வருகிற கூட்டத்தில் இதைப் பற்றி யோசிக்கலாம். காற்று எந்த திக்கில் அடிக்கிறது என்பதற்கு ராஜ்கோட்டில் சர்தார் செய்வதே ஒரு அறிகுறி.

# யூதர்கள்

ஜெர்மனியில் யூதர்களை வேட்டை யாடுகிறார்கள். நாடற்று வீடற்று வெருட்டியடிக்கப்படும் யூதர்களுக்குக் குடியேற இடம் அளிப்பதைப் பற்றித் தான் எங்கும் பேச்சாக இருக்கிறது. இந்தியா அவர்களை வரவேற்கலாம் என்று உணர்ச்சிப் பெருக்கில் நாம்கூட எண்ணுகிறோம். அவர்கள் படுகிறபாடு அப்படியிருக்கிறது. இந்தியா தன்னைச் சரண் அடைந்தவர்களுக்கு இடம் இல்லை என்று இது வரையில் சொன்னது கிடையாது.

காந்திஜி யூதர்களுக்குச் சொல்லும் யோசனையே வேறு. யூதர்கள் எந்த நாட்டையும் போய் சரணடைந்து பலவீனத்தைக் காட்டிக் கொள்ளவேண்டா மென்கிறார். யூத ஜாதியின் சிறப்பிற்கும் புத்திக்கும் சரித்திர கௌரவத்திற்கும் எற்க சுதந்திரத்தை ஸ்தாபிக்க அவர்கள் உயிர் விட்டாவது முயற்சி செய்ய வேண்டுமென்கிறார். சத்தியாக்கிரக பலத்தைக்கொண்டு தங்கள் உரிமைகளுக்குப் போராடவேண்டும் என்கிறார். மிருக பலத்தின் முன் பணிந்து, பிற நாடுகளுக்கு ஓடி, அங்கு சீரழிவதைக் காட்டிலும் இருக்கிற இடத்திலிருந்து கொண்டு அஹிம்ஸைப்போர் நடத்துவது லௌகிக முறைப்படியே மிகவும் சிறந்தது என்று எடுத்துக்காட்டுகிறார். நாகரிகத்திற்காக எவ்வளவோ தொண்டுகள் செய்தவர்கள் யூத ஜாதியினர்; பிரபல விஞ்ஞானிகளும், கலைஞர்களும் அந்த மரபில் தோன்றியிருக்கிறார்கள். அந்தக் குலத்திற்கு அணியாக மற்றொரு செயலையும் சேர்த்துக் கொள்ளட்டும்—அஹிம்ஸையின் பாதையைக் கடைப்பிடித்து மிருக பலத்தை எதிர்த்து நிற்கட்டும் என்கிறார் காந்திஜி.

## மண்பாண்டமே மேலானது

சமையலுக்கும் உணவுப்பொருள்கள் வைத்துக் கொள்வதற்கும் எந்தெந்தப் பாண்டங்கள் நல்லது, எதெது உடம்புக்கு கெடுதி விளைவிக்கக் கூடியது என்பதைக்குறித்து சென்னை சர்க்கார் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். அதை மற்றொரு பக்கம் பிரசுரித்திருக்கிறோம்.

மண் பாத்திரங்கள்தான் எல்லா விதங்களிலும் நல்லதாம். நமது கிராமாந்திரங்களில் இன்னும் பெருவாரியான குடிகள் மண் பாத்திரங்களைத் தான் உபயோகித்து வருகிறார்கள். அடுத்தப்படியாகக் கல் சட்டிகள். கிராமாந்திரத்து பிராமண குடும்பங்களில் கல் சட்டிகள் ரொம்ப உபயோகப்படுகின்றன. நவநாகரிக வாடை யடித்துவிட்ட இடங்களில் தான் பித்தளையும், அலுமினியமும், இனாமலும் அதிகமாக இருக்கிறது. அதுவும் ரயில் அடுக்குகளும், ஸெட்டுகளும் வெறும் பித்தளையும் ஈயமும் தான். அந்த ஈயமும் இரண்டே நாளில் போய் விடுகிறது. அறிக்கையில் வெங்கலப் பாத்திரங்களைப் பற்றி ஒன்றும் விவரமாகச் சொல்லவில்லை. சாதம் வடிக்க வெங்கலமும், மற்றவைகளுக்குக் கல் சட்டிகளும், தண்ணீர் வைத்துக்கொள்ள செப்பும் உபயோகப்படுத்துவது நமது கைகண்ட முறை. அது சுகாதாரத்திற்கும் மிகவும் எற்றது.

## மௌலானா மறைவு

மௌலானா ஷௌகத் ஆலி தமது 65-வது வயதில் திடீரென்று மாரடைப்பால் காலமாகி விட்டார். ஒத்துழையாமை காலத்தில் அவர் காந்திஜியுடன் ஒத்துழைத்த காலத்தில், அவர் பெயர் நாடெங்கும் ஒலித்துக்கொண்டிருந்தது. துர்ப்பாக்கிய வசமாக பிற்காலத்தில் அவர் பிற்போக்காளராகி காங்கிரஸிலிருந்து விலகி முஸ்லீம் லீக்கின் வகுப்பு வாதத்தில் ஈடுபட்டுவிட்டார். என்றாலும் நமது நாட்டின் தலை சிறந்த அரசியல் வாதிகளில் அவர் ஒருவர் என்பதில் சந்தேகமில்லை. கொஞ்சம் நாட்களுக்குமுன்தான் தான் இன்னும் 30 வருஷங்கள் இருக்கப் போவதாக மிகவும் வேடிக்கையாகப் பேசினார். அவர் மறைவு நமக்கு ஒரு பெருத்த நஷ்டம்.

## விஷமப் பிரசாரம்

சென்னை சர்க்கார் தங்கள் கொள்கைக்குக் கட்டுப்பட்டு வாக்கு சுதந்திரத்தை அபகரிக்கக் கூடாதென்று வாயை மூடிக்கொண்டு இருப்பதால் விபரீதமான பலன்கள் ஏற்பட்டு விட்டன.

சில பத்திரிகைகளில் வெளியாகும் வசைகள் மகா கேவலமாக இருக்கின்றன; ஒன்றும் இல்லாத இடத்தில் ஒரு வகுப்புணர்ச்சியை மூட்டி வருவனவாக இருக்கின்றன. ஹிந்தி எதிர்ப்பு என்ற கோலை வைத்துக்கொண்டு காங்கிரஸ் விரோதிகள் சர்க்காரைத் தாக்குவதுடன் நிற்கவில்லை. பொது மக்களின் ஹிருதயங்களில் விஷமத்தின் விதைகளை வாரி இறைக்கிறார்கள். பொது மக்களுக்குச் சரியென்று தோன்றும்படியான வகைகளில் விஷயங்களைத் திரித்துக்கூறிப் பிரசாரம் செய்கிறார்கள். ஆட்சேபித்துச் சொல்வதுயார்?

இந்த ஆபத்து நாளுக்கு நாள் வலுக்கிறது. சமீபத்தில் நடந்த கல்லெறி சம்பவம் இந்த இயக்கத்தின் ஒரு அம்சம் எப்படி முதிர்ச்சி பெற்று முற்றிலும் கேடாக முடியக்கூடும் என்பதற்கு அத்தாட்சி. சர்க்கார் உடனே வேண்டிய நடவடிக்கை யெடுத்து இதை நிறுத்துவது மிகவும் அவசியம்.

## கேள்வி நேரம்

'கேள்வி நேரம்' என்பது சட்ட சபைகளில் அங்கத்தினர்கள் சர்க்கார் 'வாயைப் பிடுங்கு' வதற்கான முக்கியமான வசதியை அளிக்கும் சமயம். ஒவ்வொரு தினமும் சபை கூடிய வுடன் அங்கத்தினர்களுக்கு மந்திரிகளைக் கேள்விகேட்கும் உரிமையுண்டு; ஆனால் இந்தக் கேள்விகளை முன்னாலேயே தயாரித்து அனுப்பி விடவேண்டும். சர்க்கார் இலாகாக் களின் தவறுகளையோ அல்லது குறை களையோ குறித்துத் தகவல் கேட்கலாம்.

இந்தக் கேள்வி நேரத்தை ஏற்படுத்தியவர் களின் நோக்கமென்ன வென்றால், கேள்வி களின் மூலம் முக்கியமான பொது விஷயங் களில் சர்க்காரின் கொள்கை திட்டம் முதலி யவைகளைத் தெரிந்து கொள்ளலாம். உபக் கேள்விகளை அப்பொழுதப்பொழுது கேட்டு ஒரு பிரச்னையை அக்கு அக்காகக்கூட அலசி விடலாம்.

நமது சட்டசபைகளில் இந்தக் கேள்வி நேரம் சரியாக பயன்படுவதாகத் தெரிய வில்லை. அங்கத்தினர்கள் தங்களுடைய இந்த முக்கியமான உரிமையை சரியாக பிரயோகம் செய்வதில்லை. உபயோக மற்ற கேள்விகளைப் போட்டு சர்க்காரின் பொழுதையும் குடி களின் பணத்தையும் வீணாக்குகிறார்கள். "அந்த ஊரில் எவ்வளவு கால் நடை?" "இந்த ஜில்லாவில் எவ்வளவு சாகுபடி நிலம்?" என்றலெல்லாம் கேள்விகள் கேட்கிறார்கள். அதற்குக் கேள்விகள் தேவையில்லை. புள்ளி விவரங்களை மந்திரியிடமிருந்து தெரிந்து கொள்ளவேண்டிய அவசிமில்லை.

சர்க்காரின் முக்கிய பொதுக்கொள்கை களைப்பற்றி அவசியமான கேள்விகளைக் கேட் டால் அதில் செலவிடும் காலமும் சிரமும் வீணு காது.

முக்கியமாக நமது சட்ட சபையில் ஸ்ரீ கே. வி. ஆர். சுவாமி என்பவரும் ஸ்ரீ மகமது ஷாம்னாத் சாகிபும் தான் அதிகமாகக் கேள்வி கள் கேட்கிறார்கள். அந்தக் கேள்விகள் எல்லாம் முக்கால் வாசி அவரவர்கள் தொகுதி யைக் குறித்தனவாகவே இருக்கின்றன; அதி லும் புள்ளி விவரங்கள் போன்ற எளிதில் கிடைக்கக் கூடிய தகவல்களைக் கேட்பனவா கவே இருக்கின்றன.

கேள்விகள் ஆணித்தரமானவைகளாக இருக்கவேண்டும். ஒரு கேள்வியிலிருந்து ஒரு பெரிய பிரச்னையின் சிக்கல் தீருவதாக இருக்கவேண்டும். கேள்வி நேரத்தை ஸ்வா ரஸ்யமாக்க வேண்டும். அப்படி செய்தால் மந்திரி "நோடீஸ்" என்றோ, "கெஜட்டில் இத்தனையாவது பக்கம் பார்க்க!" என்றோ சொல்லமுடியாது.

---

## அறிவிப்பு

"பாரதமணி" வாரப்பதிப்பு இந்தியா, இலங்கை, பர்மா முதலிய விடங்களிலுள்ள பத்திரிகை ஏஜண்டுகளிடம் கிடைக்கும். சென்னை நகரில் எல்லா டிவிஷன்களிலுள்ள பத்திரிகை ஏஜண்டு கடைகளில் கிடைக்கும். உங்களுக்குப் "பாரதமணி" இதழ் கிடைக்க ஏதாவது அசௌகரியப்பட்டால் மானேஜர், பாரதமணி, 7, வடக்கு மாடவீதி, மைலாபூர், சென்னை என்ற விலாசத்திற்கு ஒரு கார்டு எழுதிப் போடுங்கள். பாரத மணி உங்கள் இருப்பிடம் வந்து சேரும்.

பாரதமணியை விற்க விரும்பும் ஏஜண்டு கள் மானேஜருக்கு விண்ணப்பம் செய்து கொள்ளலாம்.

மானேஜர்.

## ஆசிரியர் அறிக்கை

"பாரதமணியில்" பிரசுரிக்க வேண்டிய சிறு கதைகள், கட்டுரைகள், கவிதைகள் முதலியவைகளை ஆசிரியர் "பாரதமணி" 7, வடக்கு மாடவீதி, மைலாப்பூர், சென்னை என்ற விலாசத்திற்கு அனுப்பவேண்டும். எளிய நடையில் காகிதத்தின் ஒரே பக்கத்தில் எழுதப்பட்ட கட்டுரைகளைத்தான் ஏற்றுக் கொள்ளப்படும். அங்கீகரிக்கப்படாத கட் டுரைகளைத் திருப்பி அனுப்பத் தபால் தலை ஒட்டிய கவர் வைத்து அனுப்புதல் அவ சியம்.

ஆசிரியர்.

# மதுவிலக்கு : பரிபூரண வெற்றி

(ஸ்ரீ ஏ. ஜி. வேங்கடாசாரி, பி. ஏ.)

சென்ற வருஷம் அக்டோபர் மாத ஆரம்பத்தில் நமது பிரதம மந்திரி தன் சகாக்களுடன் மதுவிலக்கை ஆரம்பித்து வைத்து சேலம் ஜில்லாவில் சுற்றுப் பிரயாணம் செய்தபோது கிராமவாசிகளெல்லோரும் முக்கியமாக ஸ்திரீகள்—திரள் திரளாகக் கூடி அவரைக் கண்கொண்ட தெய்வம்போல் வாழ்த்தினர். ஒரு புதிய யுகம் ஆரம்பமாகி விட்டதாக ஆனந்த மெய்தினர். அத்தருணத்தில் நான் பல சேலம் கிராமங்களைச் சுற்றிப் பார்த்து அவர்களுடைய சந்தோஷத்தை அனுபவித்தேன். பிறகு அது வெற்றிகரமாய் வேலைசெய்து வருகிறதென்று பத்திரிகைகளில் படிக்கும் போதெல்லாம் மற்றுமொரு முறை போய்ப் பார்க்க வேண்டுமென்ற பேரவாத் தோன்றும். சென்ற மாதந்தான் அதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. வெகு ஜாக்கிரதையாக ஆராய்ச்சியுணர்ச்சியுடன் ஆங்காங்குள்ள நிலைமையைப் பரிசீலனை செய்தேன். குடியிலேயே மூழ்கியிருந்த பலரை அணுகி விசாரித்தேன். அதிகாரிகளின் அறிக்கைகளை நாம் அடிக்கடி பத்திரிகைகளில் பார்ப்பதால் அவர்களையணுகி விசாரிப்பது அநாவசியமென்று கருதி விட்டுவிட்டேன். ஆனால் அதிகாரிகளும் கிராமவாசிகளும் மதுவிலக்கை வெற்றிகரமாய் நடத்தி வைப்பதில் பரிபூரணமாய் ஒத்துழைத்து வருகின்றனர் என்பதும் எல்லா விடங்களிலும் தெரிந்தது.

## கிராம வாழ்க்கையில் புரட்சி

பல பழைய குடியர்கள் முற்றிலும் மாறிவிட்டனர். குடித்துக் குடித்து ஏற்றச் சால்கள்போல் இருந்த வயிறுகள் பலருக்குக் காணோம். அனைவரும் திடகாத்திரர்களாய் விளங்கினர். விடாக் குடியர்கள் பலர் சாகுபடியில் கவனம் செலுத்தாமல், ஊரையே சுற்றிக்கொண்டு அக்கப்போர்களையே பொழுது போக்காகக் கொண்டிருப்பது வழக்கமா யிருந்தது. ஆனால், அவர்களெல்லோரும் இப்பொழுது வேளாண்மையில் காட்டும் ஊக்கம் பிறருக்கு உற்சாகமளிப்பது போலிருக்கிறது.

உடை : சேலம் ஜில்லா தரித்திரம் மிகுந்த ஜில்லா என்பது நான் சொல்லாமலேயே உங்களுக்குத் தெரியும். ஒரு பட்டைக் கோவணம், தலையில் கிழிந்த துணியால் ஒரு முண்டாசு, தோள்மீது ஒரு பொத்தல் கம்பளி—இவைதான் பெரும்பான்மை மக்கள் தரித்துவந்த உடை. மதுவிலக்கு ஏற்பட்டபின் ஏராளமான பேர்கள் இடுப்புக்கு வேஷ்டி கட்டத் தொடங்கி யிருப்பது குறிப்பிடத்தக்கது.

உணவு : சாதாரணமாக அங்கே கிராமவாசிகள் சாப்பிடுவது வரகு சாதம் அல்லது சோளக் கூழ்தான். கேழ்வரக் கூழும் உபயோகிப்பார்கள். ஆனால் அதன் விளைவு வரவரக் குறைந்து வருகிறது. வரகு சாதம் தினசரி ஆகாரமல்ல. கேழ்வரகையும் சோளத்தையும் கூழ் காய்ச்சி, உப்புப் போட்டுச் சாப்பிடுவது வழக்கம். கொஞ்சம் நல்ல நிலைமையிலிருப்பவர்கள் இந்தக் கூழை கெட்டியாகச் சாப்பிடுவார்கள். மற்றவர்கள் தேவைக்குத் தகுந்தபடி ஜலத்தை விட்டுக் கரைத்துக் குடிப்பது வழக்கம். ஏழைக் குடும்பங்களுக்குக் கெட்டிக் கூழ் அல்லது களியென்பதே அபூர்வ வஸ்துவாய் இருந்தது. மது விலக்கு ஒரு பெரிய மாறுதலை ஏற்படுத்தி விட்டது. வெறும் தண்ணீராகக் கரைக்காமல் பெரும்பான்மை மக்கள் இப்பொழுது கெட்டிக்கூழ் சாப்பிடுகிறார்கள். இதனால் அநேகமாய் எல்லோருமே அதிகமான போஷாக்குப் பெற்று கூடியவரை சரீர திடத்துடன் காணப்படுகிறார்கள். பலவீனத்தின் காரணமாக அதிகமாகப் பரவி வந்த மலேரியா ரோகமும் தணிந்து விட்டதென்று சொல்லப்படுகிறது.

கல்வியும் கடனும் : சின்னஞ் சிறு குழந்தைகளின் கண்களிலும் ஒரு புதிய ஒளி வீசுகிறது. ஆணின் சம்பாத்தியம் குடிக்குப் போன காரணத்தால் குழந்தை

களையும் கசக்கி வாட்டி வேலைகளுக்கு அனுப்பி வந்த தாய்மார்களில் பலர் அவர்களை இப்பொழுது பள்ளிக்கூடங்களுக்கு அனுப்புகிறார்கள். ஏழைக் குடியானவர்கள் மகசூல் வந்தவுடன் ஒன்றிரண்டு மாதங்களுக்கு வேண்டிய தான்யத்தை மட்டும் வைத்துக்கொண்டு, மிச்சத்தை இலேவாதேவிக்காரனிடம் போட்டுக் கடன் வட்டிக்கு வரவு வைத்துக்கொள்ளச் சொல்வது பழக்கம். சர்க்கார் கந்தாயத்துக்கு உடனே அவனிடம் கடன் வாங்க வேண்டிய நிலைமை இருந்து வந்தது. ஆனால் சென்ற வருஷம் ரொம்பவும் ஏழைகளான குடியானவர்கள் மதுவிலக்கினால் மிச்சப்பட்ட காசைக் கொண்டு சுலபமாகக் கந்தாயத்தைச் செலுத்தி விட்டனர். ஒரு சிலர் பழைய கடன்களின் வட்டி பாக்கிகளைச் செலுத்திவிட்டு, புதிய கடன்களை வாங்காமல் காலந்தள்ள முடிந்தது. குடித்து வந்த ஜாதி ஹிந்துக்களில் பெரும்பான்மையோர் கடன் தொல்லையுள்ளவர்கள். எனவே, மதுவிலக்கின் காரணமாக அவர்கள் பணத்தை மிச்சப்படுத்தி வைக்க முடியவில்லை.

கூலிகள் உயர்வு: ஆனால், ஹரிஜனங்களுக்கு மதுவிலக்கு ஒரு வரப்பிரசாதமென்றே கூற வேண்டும். அநேகமாய் ஒவ்வொரு ஹரிஜனக் குடும்பத்திலும் ரூ. 25 முதல் 50 வரை ரொக்கப் பணம் இருப்பதாக தெரிய வருகிறது. கூலி வேலையே செய்துகொண்டிருந்த பல ஹரிஜனங்கள் ஏர்மாடுகளை வாங்கி, நிலங்களை வார சாகுபடி செய்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. இதன் காரணமாக, கிராமங்களில் விவசாய வேலையாட்களின் கூலி உயர்ந்து விட்டது. கள்ளுக்காக வேண்டி போட்டா போட்டியுடன் உழைப்பைக் குறைந்த விலைக்கு விற்கும் பழக்கம் மறைந்து விட்டது. பெண் கூலியாட்களுக்கு தினசரி 0-1-3 தரப்பட்டு வந்தது இப்போது 0-2-0 வாக உயர்ந்து விட்டது. ஆனால், இதன் விளைவாக வேலை செய்யும் உணர்ச்சி குறைந்து விடுமென்று சிலர் அபிப்பிராயப் படுகின்றனர். கூலி உயருமே ஒழிய உணர்ச்சி குறையாதென்பது இன்னம் சிலரின் கருத்து.

குற்றங்கள் குறைவு: கடைகளிலிருந்த போது ஊர்களில் சண்டைகளுக்குக் குறைவேயில்லை. போலீஸ்காரர்களுக்கும் குடிக்காரர்களுக்குங்கூட கடைகளுக்குள்ளேயே கைகலப்பு சகஜமாயிருந்தது. அதனால் போலீஸ் படையினர் எல்லா விடங்களிலும் கண்டிப்பாய்க் கடமையைச் செய்வது சாத்தியமற்றிருந்தது. அந்த நிலைமை இப்பொழுது மாறிவிட்டது. கள்ளே கலகத்துக்கு அஸ்திவாரம் என்பது வெளிப்படை. கிராமச் சண்டைகளில் பாதி போதையின்போது நடைபெறுபவை.

குடும்ப அந்நியோந்நியம்: குடிகாரர்கள் தாங்கள் மனிதர்களென்பதையும் மறந்து மிருகத்தனமாய் நடப்பது சகஜம். இரவு 12 மணி யானாலும் குடிகாரர்கள் கூச்சல் ஓயாது. குடும்பங்களில் ஓயாச் சண்டை. இப்பொழுது 8 மணிக்கெல்லாம் ஊர் அடங்கி விடுகிறது. ஆபாசமான வசைச் சொற்களை பரிமாறிக்கொண்டு கிராம வாழ்க்கையை நரகாவஸ்தையாக்கிவந்த காட்சிகள் கனவாய் விட்டன. குடும்ப வாழ்க்கை அந்நியோந்நியமாய் விட்டது. அதன் முதற் பலனாக ஜனன விகிதம் இனி ரொம்பவும் உயர்ந்து விடலாகுமென்று கூட நினைக்கவேண்டி யிருக்கிறது.

## பணக்காரர்களின் ஏமாற்றம்

மதுவிலக்கினால் நஷ்டமும் வருத்தமும் அடைந்திருப்பவர்கள் பணக்காரர்களும் அயோக்கியர்களுந்தான். குடிக்காக 2 அணாக் காசை வீசி எறிந்தால் சொன்னதைச் செய்ய எத்தனை ஆட்கள் வேண்டுமானாலும் தயார் என்றிருந்த அட்டூழியம் அசாத்தியமாய் விட்டது. எனக்கு ஒருவனிடம் பகையென்றால், பத்து அல்லது இருபது தடியர்களுக்கு ஆளுக்கு நாலணாகள் வார்த்துவிட்டு ஏவிவிட்டால் போதும், எதிரியின் மகசூலை பாழ்ப்படுத்தலாம்; அவனுடைய வைக்கோல் போரை இருந்த விடந் தெரியாமல் செய்துவிடலாம்; மாடு கால்களை வெட்டிவிடலாம்; வழியில் இடைமறித்துக் கொண்டு தாக்கச் செய்யலாம். இவை கிராமாந்தரங்களில் சகஜமாயிருந்து வந்தன. அந்தப் பாழுங் கள்ளை உத்தேசித்து இந்த அட்டூழியங்களைச் செய்து வந்த ஆட்களுக்கு மதுவிலக்குக்குப்பின் மனிதவுணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. எனவே, இம்பொழுது

பத்து ரூபாய் கொடுத்தாலும் அந்த ஈனச் செயல்களைச் செய்ய யாரும் முன் வருவதில்லை. எங்களூரிலிருந்து 4 மைல்களுக் கப்பால் இரண்டு காட்டாறுகளையும் பல ஏரிக்கரைகளையும் தாண்டிச் செல்ல வேண்டிய ஒரு கிராமமுண்டு. அதில் இரண்டு ஆசாமிகளுக்குள் சண்டை வலுத்தது. உள்ளூராட்கள் அவர்களுடைய கருவிகளாய் முன் வர சம்மதிக்கவில்லை. அவர்களிலொருவன் எங்களூருக்கு வந்து இருபது தடியர்களுக்கு 'சமர்த்தியாய்' கள் வார்த்தான். ஒரு ரூபாய் ரொக்கமும் கொடுத்தான். ஒரே இரவில் அவர்களெல்லோரும் அந்த கிராமம் சென்று எதிரியின் ஒரு பெரிய இரட்டை மாட்டு வண்டியைச் சக்கரங்களுடன் கூட தலையில் தூக்கிக்கொண்டு வரப்புக்களையும் ஆறுகளையும் கடந்து வந்து விட்டார்கள். மறுநாள் பெரிய மூங்கில்வாரைகளைப்போட்டுக்கட்டி அதே நபரின் ஒரு வைக்கோல் போரையும் கொண்டுவந்து விட்டனர். இது நான்கு வருஷங்களுக்கு முன் நடந்த சம்பவம். அந்த தடியர்களில் பலர் இப்பொழுது கள்ளில்லாமையால் சாத்வீகர்களாய் விட்டனர். கஷ்டப்பட்டு வயிறு வளர்க்கிறார்கள். அந்தப் பழைய சம்பவத்தை அவர்களுக்கு நான் நினைவூட்டியபோது வெட்கத்தால் தலை குனிந்தனர். கிரிமினல் வழக்குகள் ரொம்பவும் குறைந்து விட்டதாக சர்க்கார் தரும் புள்ளி விவரங்களிலிருந்து தெரிகிறது.

## ரூ. 75 லக்ஷம் லாபம்

இம்மாதிரி மது விலக்கினால் சேலத்தில் பரம ஏழைகளாயிருப்பவர்களுக்கு போஷாக்கான உணவு, நாகரீக உடை, தேக வலிமை, சந்தோஷமான குடும்பவாழ்க்கை, வருமான உயர்வு, மனிதவுணர்ச்சி-இவை கிடைத்திருக்கின்றன. சர்க்காருக்கு அந்த ஒரு ஜில்லாவில் மது விலக்கினால் நஷ்டம் 2 லக்ஷம் ரூபாய். ஆனால் பரம தரித்திரர்களான ஏழைகளிடம் மிச்சப்படுவது குறைந்தது ரூ 75 லக்ஷம் இருக்கும். எனவே, அவர்களுடைய பண்டம் வாங்கும் சக்தியை வளர்க்கும் இத்திட்டத்தை எப்படிப் போற்றாமலிருக்க முடியும்?


குடிப்பதற்காக அடுத்த ஜில்லாக்களுக்குப் போய்வரும் வழக்கம் எல்லையோரத்தில் இன்னம் கொஞ்ச அளவுக்கு இருக்கிறது. ஆனால், உட்புறங்களிலிருப்பவர்களில் பலர் கள்ளை அடியோடு மறந்து விட்டனர். சில்லரைக் கடைகளில் வடை, முறுக்கு, போண்டா முதலியவை மாலை வேலைகளில் அதிகமாய் விற்பனையாகின்றன.

மரமேறிகள்: மரமேறிகள் சுமார் 5000 பேர்கள் வரை மதுவிலக்கினால் பாதிக்கப்பட்டனர். சுமார் ஆயிரம் பேர்களுக்கு மேல் வேறு ஜில்லாக்களில் குடியேறி விட்டனர். பலர் விவசாயக் கூலிகளாகவும் தங்கள் நிலங்களைச் சாகுபடி செய்கிறவர்களாகவும் மாறிவிட்டனர். சர்க்காரும் தர்காஸ்து நிலங்களை அவர்களுக்குச் சலுகையுடன்கொடுத்து வருகின்றனர். ஐந்தாறு இடங்களில் பதனியிலிருந்து வெல்லம் காய்ச்சும் தொழில் கூட்டுறவு முறையில் நடந்து வருகிறது.

## சிக்கன இயக்கமும் கிராம விளையாட்டுக்களும்

மது விலக்கினால் மிச்சப்படும் பணத்தைக் கிராமவாசிகள் சேமித்து வைப்பதற்கு அனுகூலமாக நடந்துவரும் இயக்கம் எதிர்பார்த்த அளவுக்கு வெற்றி பெறவில்லை. கிராமவாசிகளுக்குத் தேகாப்பியாசப் பயிற்சியை அளிக்கவும் கிராமாந்தர விளையாட்டுகளைச் சொல்லிக் கொடுக்கவும் நான்கு இடங்களில் வகுப்புகளை வைத்து பல தொண்டர்களைத் தயாரித்திருக்கிறார்கள். ஆனால், இப்போதைய ஏற்பாட்டின் கீழ் இது வெற்றிகரமாய் நடைபெறுமென்று தெரியவில்லை. திட்டமான ஒரு பிளான் போட்டு ஒவ்வொரு தாலூக்காவிலும் பத்து இடங்களிலாவது அத்தகைய களியாட்ட ஸ்தலங்கள் இருப்பதற்கு வசதியேற்பட்டாலொழிய இந்த முயற்சியினால் விசேஷ பலன் கிடைக்காதென்றே தெரிகிறது. அபிவிருத்தி அதிகாரியின் வேலை இந்த நிலைமைகளின் கீழ் விழலுக்கிறைத்த நீராகவே முடியுமென்று அஞ்சுகிறேன். இந்த வேலைகளில் ஈடுபட்டுள்ளவர்களில் பலர் உண்மையான கிராமாபிவிருத்தியைவிட விளம்பரத்தில் அதிக ஆசையுள்ளவர்களாகத் தென்படுகிறார்கள் என்ற புகார் கிராமங்களில் இருந்து வரு

கிறது. மதுவிலக்கின் முழுப் பயனையும் கிராம வாசிகள் பெற வேண்டுமானால். இப்போது நடந்துவரும் மேல்பூச்சு முறைகள் போதா. கடன் நிவாரணம், நீர்ப்பாசன வசதிகள், கல்வியபிவிருத்தி, கிராமங்களை வாஸயோக்யமாக்குதல் போன்ற அம்சங்களையும் தழுவிய ஒரு 5 வருஷத் திட்டத்தை வகுத்து நடத்துவதே முறை.



## "போலீஸ் விசாரணை"

போலீஸ் இன்ஸ்பெக்டர்:—"அடேய், நீதானே நேற்று ஆட்டுக்கிடா திருட்டுப் போய்விட்டது என்று ஸ்டேஷனுக்கு வந்திருந்தது ?"

குடியானவன் :--"ஆமாங்க எசமான்."

போ. இன்ஸ்.:—"எந்த இடத்லேடா கட்டியிருந்தே ஆட்டை ?"

குடியா :—"எசமான்! இதோ மொளை யிருக்குல்ல, இதுலே தான் கட்டிருந் தேனுங்க."

போ. இன்ஸ்: —"யார் திருடிக்கிட்டுப் போனான்னு தெரியுமாடா உனக்கு."

குடியா :—"அந்த எளவு தெரிஞ்சா நான் ஏன் எசமான் கிட்ட வந்து மன்னுடிக்கிட்டு நிக்கணும் ?"

# கிராமப் புனருத்தாரணம்

[ஸ்ரீ. ரா. குஞ்சிதபாதம், பி. ஏ.]

(தொடர்ச்சி)

விவசாயத்தில் மட்டிலுமல்ல, கல்வி விஷயத்திலும்கூட நாம் டென்மார்க்கிடமிருந்து தெரிந்துகொள்ள வேண்டியது ரொம்ப இருக்கிறது. டென்மார்க்கில் கிராம மக்களிடையே கல்வி அறிவு நன்ருகப் பரவி இருக்கிறது. எழுதப் படிக்கத் தெரியாதவர்களே கிடையாது; டேனிஷ் குடியானவன் அத்துடன் திருப்தி அடைவதில்லை. குடியானவர்களுக்குப் பொதுக் கல்வி அளிப்பதற்காக வயது வந்தவர்களுக்கென்றே கூட்டுறவு சங்கங்கள் தனிப் பள்ளிக்கூடங்கள் நடத்துகின்றன. விவசாயம், பால், நெய் முதலியவை உற்பத்தி—இவற்றைத் தவிர, அரசியல், பொருளாதாரம், பூகோள சாஸ்திரம், வான சாஸ்திரம்— இவற்றிலும் பாடங்கள் உண்டு. இந்தியாவில் ஒரு காலேஜ் மாணவனுக்குக்கூட அவ்வளவு தெரியாது. அந்த நிலைமைக்கும் நமக்கும் வெகுதூரம் என்ருலும் நாம் அதை லட்சியமாக வைத்துக் கொண்டுதான் வேலை செய்ய வேண்டும்.

முதலாவதாக, குடியானவனுக்கு அறிவுத் தாகம் உண்டாக்க வேண்டும். அதற்கு ரேடியோ ஒரு இன்றியமையாத கருவி ஆகக் கூடும்; தமிழ்ப் பத்திரிகையும் வெகுவாக அதற்கு உதவியாக இடமிருக்கிறது. ஆனல் இவை யிரண்டும் நன்ருகக் குடியானவனுக்குப் பலன் அளிக்குமுன், குடியானவர்களை ஓரிடத்தில் கூட்டிப் பழகும்படி செய்ய வேண்டும். கிராமப் பள்ளிக்கூடம் அதற்கு வசதியான இடம்.

ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு பள்ளிக்கூடம் இருக்க வேண்டும் பாடம் நடக்காத காலங்களில் பெரியவர்கள் அங்கே கூடலாம். சர்க்கார் ஒவ்வொரு ஊரிலும் இந்த மாதிரிக் கட்டிடம் ஏற்படுத்துவதென்பது சிரமம். கிராமத்தாரே ஒத்து, பொது இடத்தையோ சொந்த இடத்தையோ விட்டுக் கொடுத்து தலைக்குக் கொஞ்சமாகப் போட்டுக்கட்டிடம் கட்டுவது அசாத்தியமன்று. பள்ளிக்கூடத்தின் விளையாட்டு மைதானம் ஒரு அழகிய தோட்டமாக இருக்க வேண்டும். ரேடியோவிற்காக அறையும் அதில் இருக்க வேண்டும். ஸ்தல ஸ்தாபனங்கள் செட்டுகள் வரவழைத்து வைக்க வேண்டும். அதற்காக ஒரு சிறு வரி விதிக்க பஞ்சாயத்துக்கு அனுமதி தரலாம்; அதைக் கிஸ்தியுடனேயே சேர்த்து வசூல் செய்துவிடலாம்.

வீடு பிடிக்காவிட்டால் உடனே குடியானவன் கள்ளுக் கடையை நாடுகிருன். குடியானவனைக் குடிக்காமலிருக்க செய்ய வேண்டுமானுல் அவன் குடிசையில் கலகலப்பு ஏற்படவேண்டும். அவனுக்கு வேறு ஏதாவது நல்ல பொழுதுபோக்கு ஏற்படவேண்டும். மாலை நேரத்தில் ரேடியாவைக் கேட்பதற்கு முன்னே பின்னே பள்ளிக்கூட உபாத்தியாயரோ, யாராவது படித்தவரோ குடியானவர்களைக் கூட்டி பத்திரிகைகளில் சில பாகங்களையும் சுகாதார விஷயங்களையும் படித்துக் காட்ட வேண்டும்.

குறித்த தினங்களிலும் குறித்த நேரங்களிலும் பெண்கள் ஒன்று கூடுவதற்கு பள்ளிக்கூடம் சௌகரியமான இடம். கூட்டுறவு சங்கங்கள் சில சேர்ந்து ஒரு உபாத்தியாயரை நியமித்துப் பெண்களுக்குத் தையல்முதலியன கற்றுக்கொடுக்கலாம். தேவையான பொருள்களைச் சங்கங்கள் சப்ளை செய்து உற்பத்தி செய்யப்பட்ட சாமான்களை மத்திய ஸ்தாபனத்திற்கு விற்பனைக்கு அனுப்பலாம். சுதேசி சாமான்கள் கிடைப்பதரிதாக இருக்கும் இந்தசமயத்தில் அந்த மாதிரி உற்பத்திகள் மிகவும் உபயோகமாக இருக்கும்.

சரியான உணவு, குழந்தை வளர்த்தல், சுகாதாரம்--இவற்றைப்பற்றி ஜில்லா பத்திரிகையில் பெண்களுக்கென்றே குறிப்புகள் இருக்க வேண்டும்.

படிப்பு, தோட்ட வேலை கைத் தொழில் வேலை—இவற்றில் ஒரு நாளுக்குக் குறைந்தது 8 மணி நேரம் கழியும் படியாக குழந்தைகளின் பள்ளிக்கூடப் பாட திட்டம் அமைய வேண்டும். அப்பொழுதுதான் கூடியவரை குழந்தைகள் நல்ல சூழ்விலும் சந்தோஷத்திலும் காலம் கழிப்பார்கள்.

தஞ்சாவூர் ஜில்லாவில்தான் முன்னேற்ற வேலை மிகவும் மும்மரமாக நடக்க வேண்டிய அவசியம் அதிகமாக இருக்கிறதென்று எனக்குத் தோன்றுகிறது. முன்னேற்றத்திற்கான அம்சங்கள் வேறெந்த ஜில்லாவிலும் இவ்வளவு கிடையாது என்று நிச்சயம் சொல்லலாம்.

மேட்டூர்ப் பாசனம் வந்தாலும் வந்தது—ஜில்லா பூராவிற்கும் ஒரு முதல் தரமான பாசன முறை ஏற்பட்டிருக்கிறது. அதன் ஜனத்தொகை வேறெதற்கும் கிடையாது ; விஸ்தீர்ணமும் பெரியது. கிடைக்கும் நிலத்தையெல்லாம் சாகுபடிக்குக் கொண்டுவந்து, பயிரோ, மரங்களோ, புல் பச்சையோ ஏற்றினலும், கால் நடைகளை அபிவிருத்தி செய்து நல்ல பால், நெய், மோர் வசதிகளுடன் நிலத்திற்கு நல்ல உரம் உற்பத்தி செய்து கொண்டாலும், குடியானவன் கூட்டுறவு சங்கத்தைச் சரியாக உபயோகம் செய்துகொள்ளக் கற்றுக்கொண்டாலும்—மொத்தத்தில் கூட்டுறவு மகா மந்திரத்தை நாடெங்கும் ஒலிக்கும்படி பரப்பினால், கூடிய சீக்கிரம் நாம் இதுவரை காணுத கண் குளிரும் காட்சியைக் காணலாம்.

தஞ்சாவூர் ஜில்லா

ஒரு சின்ன புள்ளி ஜாப்தா

| | தொகை | தீர்வை |
|---|---|---|
| ரூ. 10-ம் கீழும் கிஸ்தி செலுத்தும் ரயத்துவாரிப் பட்டாக்கள் | 2,84,559 | ரூ. 6,86,870 |
| ரூ. 10-க்குமேலும் முப்பதுக்கு கீழும் செலுத்துபவன | 66,913 | 11,40,731 |
| ரூ. 30-க்கு மேலும் 50-க்கு கீழும் | 19,506 | 6,70,219 |
| 50-க்கு மேலும் 100-க்குக் கீழும் | 13,611 | 8,54,894 |
| 100-க்கு மேல் | 11,447 | 32,97,561 |
| | 3,96,036 | 66,50,275 |

| | |
|---|---|
| 1931-ம் வருஷ ஜனக் கணக்கின்படி மொத்த ஜனத்தொகை | 2,385,920 |
| ஜில்லாவின் மொத்த விஸ்தீர்ணம் | (ஏகர்கள்) 2,396,896 |
| ஜமீன்தாரி | 199,483 |
| பூரு இனும் | 532,132 |
| மைனர் இனும் | 79,895 |
| பாக்கி சர்க்கார் ரயத்துவாரி | 1,585,436 |

ஜில்லாவின் மொத்த பேரிஜ் ரூ.88லட்சம்

சிறு கதை.

# ஆறுதல்

(ஸ்ரீ. சி. எஸ். செல்லப்பா)

அவன் வாழ்க்கை செக்கு மாடுகள் சுற்றிச்சுற்றி வருவதுபோல் ஆகிவிட்டது. காலைமுதல் அஸ்தமானம் வரையில், ஒரு கை போய் இணைப்பு விட்டுத் தள்ளாடிக்கொண்டிருந்த அந்த நாற்காலியில், மூட்டைக் கடியை சகித்துக்கொண்டிருப்பது அவனுக்கு சுபாவமாகிவிட்டது. ஆனால் அதிலும் அவனுக்குப் பரிபூரண திருப்திதான் இருந்தது; ஏனென்றால் அவன் முழு வயற்றுக்கு—குடும்பத்துக்கு—அந்த நாற்காலி சோறுபோட்டது. அவனுடைய அந்தஸ்துக்கு ஏற்காதபோனாலும் வந்த கடிதங்களைமட்டும் தான் பூராவும் பதிவுசெய்யும் வேலையை ருசித்தோ ருசியாமலோ முறையாக அவன் செய்துகொண்டு வந்ததில் ஆச்சரியமில்லை.

ஆனால் அன்று வேறுவிதமாக இருந்தது. ஆபீஸ் கடிகாரம் மணி ஆறு அடித்த சத்தம் கேட்டு தான், திடீரென யோசனை கலைந்து நாற்காலியிலிருந்து பரமசிவன் எழுந்தான். ஆபீஸ் நேரம் ஐந்துமணியோடு முடிந்துவிட்டது. அவசரம் அவசரமாகக் கொத்துச்சாவி கலகலக்க, மேஜை அறைகளைப் பூட்டிவிட்டு, நாற்காலி முதுகில் தொங்கிய கோட்டை எடுத்துத் தன் முதுகை மறைத்துக்கொண்டு படியிறங்கி சாலையில் கலந்துகொண்டான்.

நேர் எதிரே கடலில் இருந்து ஊதி வரும் காற்று குளிரெடுத்தது—அவனுடைய அன்றையத் தொல்லைகளுக்கு ஊதிக்கொடுப்பதுபோல். மணி சத்தத்தால் ஆபீஸ் அறையில் கலைந்தயோசனை, ஒன்றுகூடும் நுரைபோல் மறுபடியும் மனதோடு கலந்துகொண்டது. தன் சட்டைப் பையில் கைவிட்டு சந்தேக நிவர்த்திக்காக மறுபடியும் அந்தக் கடிதாசியை எடுத்து அதிலிருந்த இரண்டொரு வரிகளைப் படித்துவிட்டுப் போட்டுக்கொண்டான். அந்தக் கடிதம்மேல் ஆபீசிலிருந்து கடிதப் போக்குவரத்துகளை காலா காலத்தில் அனுப்பத்தவறியதற்காக அவனுக்கு ஒரு 'ஷொட்டு' (Black Mark) வைத்து வந்திருந்த குறிப்பு. பல வருஷ சர்வீஸ் காலத்தில் இந்தமாதிரி 'ஷொட்டு'கள் வருவது உத்தியோகஸ்தர்களுக்கு இயல்பான போதிலும்கூட பரமசிவத்துக்கு அந்த முதல்ஷொட்டு ரொம்பவும் உறுத்தியது. இதற்கு சந்தர்ப்பமே ஏற்படாமல் போயிருந்திருக்க வேண்டுமே என்ற நினைப்புதான் வழிநெடுக அவனைத் தொடர்ந்தது.

அதே மனநிலைமைதான் அவன் வீட்டுப்படி ஏறி நடையைக் கடந்து கூடத்துக்கு சென்றபோதும். அந்தமாதிரி அவன் வருவதே ரொம்ப அபூர்வம். தினமும் கூடத்திற்கு வந்ததும் அவன் கண்கள் அழகான மூக்கும் முழியும் பதிந்து மலர்ந்த புஷ்பம்போன்ற உதடுகள், காது மடல்களோடு கூடிய அந்த சின்ன உருண்டமுகமான தன்மகிழ்ச்சிப் பொருளை பாய்ந்து தேடும். அலை தள்ளி அலை சுழிப்பதுபோல் மிருதுவான கை கால்களை இழுத்துச் சுழித்து தவழ்ந்து சலங்கை கலகலக்க தொப்புக்கொட்டி வரும் தன் கற்பகப் பொருளை அப்படியே வாரி எடுத்துக் கொள்வான்.

ஆனால் இன்று—மனதுக்குக் கண்களை பறிகொடுத்துவிட்டு குறிப்பற்ற பார்வையுடன் கோட்டைக் கழற்றி ஸ்டாண்டில் மாட்டப்போனான். அவன் செல்வம் அங்கேதான் இருந்தது—அவன் கண்கள் தேடவில்லை. அடுத்த க்ஷணம் புரியாதபுண்பட்ட அந்தக்குழந்தை பரக்கப் பரக்கக் காலை வாரிப்போட்டு கெக்கரித்து வருவதையும்கூட அவன் காதுகள் உணரவில்லை. கோட்டை மாட்டிவிட்டு ஷர்ட்டை மாற்றிக்கொண்டிருந்தான்.

ஏதோ குளுமையாகவும் குருகுருப்பாகவும் அவன் கால்களில் ஊரும் உணர்ச்சிதான் அவனுக்கு அப்போது உண்டாயிற்று. அந்த 'ஷொட்டு'தான் அவன்

ஞாபகத்தில்! விவரமல்லாத ஒரு அருவ ருப்புதான் அந்த ஊறலில்!

'ஸ்ஸ்...' என்று முகத்தைச் சுளித்து ஓசை செய்துகொண்டே காலை ஏதோ நினைவில் லேசாகப் பின்னால் தள்ளிவிட்டான். தான் செய்தது இன்னதென்றே அவனுக்குத் தெளிவில்லை. அப்போது காலில் மிருதுவாக ஏதோ தள்ளப்படவும் திடுக்கிட்டுப்போய் 'அடடா!' என்று கொண்டே திரும்பினான். குழந்தை கற்பகம்! முழங்கால்களைத் தரையில் பதித்து அவன் கால்களை கட்டித் தொத்திய குழந்தை அதே க்ஷணம் மல்லாந்து சாய்ந்தது.

பதறிப்போய் குழந்தையை அப்படியே தூக்கித்தோள்மீது தாங்கித் தலையைத் தடவிக்கொடுத்தான்.

"ஐயையோ, குழந்தையின் மண்டை உடைந்து போச்சு!" என்று குழந்தையின் வீறிட்ட அலறலைக்கேட்டு துடி துடித்து ஓடிவந்தாள் கனகம் கூடத்துக்கு.

"இங்கே கொடுங்கள் குழந்தையை! எங்கே காயம்பட்டதோ, வேண்டாம்டி அம்மா கற்பகம்!" என்று பதட்டத்துடன் குழந்தையை தன் கையில் வாங்கினாள். மின்னல் நேரத்தில் அவள் கண்கள் குழந்தையின் உடல் பூராவையும் ஆராய்ந்துவிட்டன.

"ஒன்றும் காயமில்லை ; நல்ல வேளை" என்று நடுங்கிய குரலில் சொன்னான் பரமசிவம்.

அலறிய குழந்தையின் முகம் சிவந்துவிட்டது. வீறிட்டுக் கத்திக் கோணிய வாய் முழுதும் விரிந்து இழுத்துக் கொண்டு போய் விட்டது போல் துடித்தது. நிலைக்குத்தியதுபோல் கண்கள் விரிந்து உறுத்துப் பார்த்தன. கண்ணீர் குப்பென்று துளிர்த்தது. அழுகை கொஞ்சநேரத்துக்கு வெளியே வரவில்லை. முக நரம்புகள் வெடவெடத்தன. தாயும் தந்தையும் குழந்தையின் கண் ராவி நிலையைப் பார்த்து தவியாய்த் தவித்தார்கள். அவர்கள் கண்களில் நீர்மல்கி விட்டது. குழந்தையின் அழுகை எப்போது வெளிவரும் என்று இரு விநாடிகளில் அவர்கள் பட்ட அவஸ்தை! குழந்தையைத் தேற்றும் வார்த்தைகள் கூட வெளிக்கிளம்பவில்லை.

அம்ம! ஒரு மட்டுக்கு அடித் தொண்டையிலிருந்து சன்னமாக ஆரம்பித்த அழுகை லேசாக வெளியே வந்து பலத்துக் கிளம்பியது. தாயும் தந்தையும் ஒரு பெருமூச்சு விட்டார்கள். உயிர் வந்தது குழந்தைக்கும்—அவர்களுக்கும்.

"ஐயோ! நாயனா தள்ளிவிட்டாரா? இப்படியா தள்ளுகிறது குழந்தையை? காலில் ஒரு கண் இல்லாமல் போச்சே உங்களுக்கு!" என்று கோபப் பாவனையுடன் கனகம் பரமசிவத்தை பார்த்துக் கொண்டே குழந்தையை, மார்போடு சேர்த்துக்கொண்டாள். குழந்தை அலறல் தணியவில்லை.

"இல்லை கனகம்! எனக்கு ஏதோ நினைப்பு. காலில் ஏதோ ஊறியதுபோல இருந்தது. சள்ளையுடன் காலால் தள்ளி விட்டேன். குழந்தையைப் பார்க்கவில்லை. வேணுமென்று தள்ளுவேனா? இங்கே கொண்டா. நான் சமாதானப் படுத்துகிறேன்" என்று குழந்தையை இழுத்துத் தன் கையில் வாங்கினான். தான் செய்த தப்புக்கு குழந்தையை தானே சமாதானப் படுத்த வேண்டுமென்று அவன் மனது துடித்தது.

குழந்தையை வாங்கியதுதான் தாமதம். அவன்முகத்தை ஒருதரம் ஏறிட்டுப் பார்த்துவிட்டு வீறிட்டுக் கத்தியது. முன்னைவிட அதிகமாக அவன் கைப்பிடிக்கு நழுவி அம்மாவிடம்போக கை கால்களைப்போட்டு பிய்த்துக்கொண்டது. அவனைப் பார்க்கவே பயப்பட்டது போலிருந்தது. கனகம்மா வாய்விட்டுச் சிரித்தாள்.

"கொடுங்களேன் குழந்தையை இங்கே! போதும் நீங்க சமாதானப் படுத்துகிற அழகு! உங்களைப் பார்க்கவே அது பயப் படுகிறது. பொல்லாத நாயனா கிட்ட போகாதேடீ கண்ணு!" என்றுகொண்டே குழந்தையைத் திரும்பவும் தான் கையில் வாங்கிக்கொண்டாள். தன்னால்

சமாதானப்படுத்த முடியாதென்று பரமசிவமும் அவளிடமே அந்தபொறுப்பைக் கட்டிவிட்டான். குழந்தையுடன் கனகம்மா சமயலறைக்குப் போய்விட்டாள்.

ஆபீஸ் தொல்லையைப்பற்றி தன்மனம் கவலைப்பட்ட நிலைமையில் குழந்தையை உதறிவிட்டதை நினைக்கும் போது அவன் மனது வேதனைப்பட்டது. கன்னிப்போய் ரத்தம் சுரந்து நடுங்கிய முகம் இன்னும் அவன்கண்முன் சித்திரமாக நின்றது. கடைசியாக அவனிடம் வரமறுத்து அது காட்டிய பீதிப் பார்வையும் முகக்குறியும் உறுத்தியது.

கொஞ்சநேரம் சென்றது. சமயலறையில் கற்பகத்தின் அழுகை தாயின் ஆறுதல்களுக்கு இடையே குறைந்து மறைந்துவிட்டது. அதற்குள் பரமசிவத்துக்குப் பொறுக்கவில்லை. குழந்தையின் அமைதி முகத்தை உடனே பார்த்துவிட வேண்டுமென்று "கற்பகம் நாயனா தள்ளிட்டேனா?" என்று அர்த்தமில்லாமல் கேட்டுக்கொண்டே சமயலறைக்குள் எட்டு எடுத்து வைத்தான்.

"போதும் அழவிட்ட லக்ஷணம்" என்றுபுடவைத் தலைப்புமறைவிலிருந்து குழந்தையை எடுத்துக்கொண்டு எழுந்து நின்றாள் கனகம். பரமசிவம் அசட்டுச் சிரிப்புடன் குழந்தையை நெருங்கி "வலிக்கிறதா கண்ணு, எங்கேபட்டது?" என்றுகொண்டே அதன் கன்னத்தில் கைவைத்துத் திருப்பினான்.

அவனைப் பார்த்ததும் குழந்தையின் கண்கள் மாறிய விதத்தைக்கண்டு அவன் பிரமித்துப்போனான். பீதிகலந்த ஒரு விழி விழித்தது அவனைக்கண்ட குழந்தை. "ஐயோ! என்னதுஎன்னது?" என்று இருவரும் வாய்திறக்குமுன்னரே குழந்தை வீறிட்டது. தாயின் தோள்களில் முகத்தை பதித்துக்கொண்டது.

"நீங்கள் கிட்ட வராதேயுங்களேன். கீழேயும் தள்ளிவிட்டு, அது கிட்டபோய் கொஞ்சினாப்போலே அது மறந்துவிடுமா என்ன?" என்று கனகம்மா குழந்தையைக்கூடத்துக்கு மறுபுறம்கொண்டுபோனாள். "நீ நாயனாவை பார்க்கவேண்டாம்டி கண்ணு; என்ன நாயனா வேண்டிக் கிடக்கு" என்று தேற்றிக்கொண்டே பரமசிவத்தை விஷமத்துடன் பார்த்தாள்.

பரமசிவத்தின் முகத்தில் சிரிப்புத் தோன்றியது என்றாலும் அது திருப்தியான சாந்தமான சிரிப்பில்லை; வேதனை கலந்த சிரிப்பு. குழந்தை ஏன் தன்னைக் கண்டு இப்படி அலறவேண்டும்? யாரிடம் சதா ஓடிவந்து விழுந்து மேலே துகைத்துக் கொஞ்சிக் குலாவிக்கொண்டிருக்குமோ அந்த தன்னை! தனக்கு உயிரான குழந்தை தன்னை வெறுத்துத் தள்ளுவது இதுதான் முதல் தடவை! அதைத்தான் அவனால் சகிக்க முடியவில்லை. கற்பகத்தின் கசப்பு முகத்தை இதுவரையில் அவன் கண்டதில்லை.

"ஹூம்! கீழே தெரியாமல் தள்ளிவிட்டால் இவ்வளவு வர்மமா அதற்கு? அடேயப்பா! உங்கம்மா கிட்டவே இரு. நாயனா ரொம்ப பொல்லாதவன்தான்!" என்று சொல்லிக் குழந்தையின் மனோபாவத்தைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே பரமசிவம் நகர்ந்து சென்றான்.

"என் கற்பகக் கண்ணுக்கு ரோஸம் இல்லையென்று நினைத்தேளா. இப்போ தெரிந்ததா? கும்பிடணும் என் தங்க விக்ரத்தெ" என்று கனகம்மா ஒரு தாயின் கர்வத்துடன் பீற்றிக்கொண்டாள். அவள் தோள்மீது குழந்தை பட்டுப்போல் துவண்டு கழுத்தைக் கட்டிக் கொண்டு, அம்மா ஒருவேளை நாயனாவிடம் தள்ளிவிடுவாளோ என்ற பயத்துடன் கண்களைத் திருப்பாமல் மூடித் திறந்து கொண்டிருந்தாள்.

கொஞ்சநேரம் ஆயிற்று. சற்று எட்டி நின்றே பரமசிவம் கற்பகத்தைக் கவனித்துக்கொண்டிருந்தான். கிட்டப்போய் நின்று மறுபடியும் சோதனை செய்து பார்க்க அவன் மனம் இடம் கொடுக்கவில்லை. ஆதலால் கொஞ்சநேரம் அப்படியே இருக்கச் செய்து விட்டால் மனம் கொஞ்சம் கொஞ்சமாக மாறிய பிறகு சாந்தப் படுத்திக்கொள்ளலாம் என்று இருந்தான். குழந்தையைச்சீக்கிரமாகவே தன் கையில் எடுத்துக் கொஞ்சவேண்டுமென்று ஆவல் அதிகரித்தது. ஆனால் குழந்தையோ பிடிவாதமாக இருந்தது.

அவனைக் கிட்ட நெருங்கவே இடம்கொடுக்கவில்லை.

குழந்தைகளின் மனநிலையே ரொம்ப மிருதுவானது. அன்பு அழைப்புக்கும் அணைப்புக்கும் தான் அதன் மனதிலும் உடலிலும் இடம் உண்டு. அதற்குப் புண் உண்டாக்கியவர்கள், அதன் மனது கசக்க இடம் தேடியவர்கள் யாராக இருந்தாலும் சரி, அதன் தாய் தந்தையைக்கூட, அது மன்னிக்காது. விருப்புக்குத்தான் அதன் ஹிருதயத்தில் இடம்; வெறுப்புக்கு இல்லை!

இதை நினைத்து நினைத்துப்பார்த்துக் கொண்டபோது பரமசிவம் மனதில் வேதனை அதிகரித்தது. குழந்தை ஆவலோடு எப்போதும்போல் தன்னிடம் தாவி வரவேண்டும் என்ற ஆவல் அவனை வாட்டியது. குழந்தையைச் சமாதானப் படுத்துவதைப் பற்றியே யோசனை செய்து கொண்டிருந்தான்.

அவனுக்கு வெளியே போகத்தோன்றவில்லை. கூடத்தைச்சுற்றிச் சுற்றி நடந்து கொண்டிருந்தான். கனகம் மற்றொரு மூலையில் இருந்து கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்லிக்கொண்டு இருந்தான். ஒரு யோசனை தோன்றியது. மேஜைமீது கிடந்த கலர் கிலுகிலுப்பையை எடுத்துக்கொண்டு மெதுவாக குழந்தைக் கிட்டப்போனான். குழந்தை முகம் அவன் பக்கம் இருந்தது. கனகம் சுவற்று படங்களைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவள் தோள் ஓரம் போய் நின்று குழந்தையை பார்த்தான். அது தூங்கவில்லை. விழித்துக் கொண்டிருந்தது. "இந்தா கற்பகம் கிலுகிலுப்பை! சமத்துக் கண்ணு" என்றுகொண்டே அதை மெதுவாக அதன் கைளில் வைத்து அமுக்கினான். ஒரு முனகலுடன் தலையைத் தோளிலிருந்து உயர்த்தி உலுப்பிக் கொண்டு அதைக் கையில் வாங்கிக்கொண்டது. பரமசிவத்தின் கண்கள் மகிழ்ச்சியால் பிரகாச மடைந்தன. அடுத்த விநாடி கிலுகிலுப்பை குழந்தையின் கைகளிலிருந்து பாய்ந்து ஒரு மூலையில் போய்விழுந்தது.

"அப்படிப் போடு!" என்று கனகம் ஒரு குதி போட்டுச் சிரித்தாள். குழந்தையின் பிடிவாதமும் பரமசிவத்தின் தோல்வியும் அவளுக்கு உற்சாகமாக இருந்தது. கற்பகம் மீண்டும் அழ ஆரம்பிக்கவும் கனகம் கணவனிடம் பொய்க் கோபத்தைக்காட்டி குழந்தையுடன் ஒரு புறம் தள்ளிப் போய்விட்டாள் குழந்தையைத் தூங்கச்செய்ய. பரமசிவம் தோல்வி அடைந்தான்.

தன் பிடிவாதம் அத்தனையும் கண் இமைகளுக்குப் பின் மறைத்து வைத்திருப்பதுபோல் கண்களை மூடிக்கொண்டு தொட்டிலில் மிருதுவாக மூச்சுவிட்டுக் கொண்டிருந்தாள் குழந்தை கற்பகம். தொட்டில் போய் திரும்பும்போதெல்லாம் குழந்தை நெற்றியில் உரசிக்கொண்டிருந்த மயிர் நிமிர்ந்து படிந்துகொண்டிருந்தது. கனகம்மாள் சங்கிலிகளைப் பிடித்துக்கொண் டிருந்தாள். பரமசிவம் மெதுவாக வந்து தொட்டில் ஆட்டத்தை நிறுத்தினான்.

"ஐயோ, அவள் தூங்கப்பட்ட பாடு—போதும்; எழுப்பிவிடாதீர்கள்" என்று அவன் கையைப் பிடித்து இழுத்தாள் கனகம்.

"இல்லை, பேசாமல் இரேன்" என்று புன்சிரிப்புடன் மெதுவாகத் தொட்டிலுக்குள் தலையைத் தாழ்த்தி பரமசிவம் குழந்தையையே பார்த்துக்கொண்டிருந்தான். உணர்வு அயர்ந்திருந்த அந்த நிலையில்தான் கற்பகத்தை நெருங்க அவனுக்குத் துணிவு வந்தது. "இப்போ என்ன செய்வாய்?" என்று சொல்லிக் கொண்டே மிருதுவாக அதன் கன்னத்தில் பட்டதும் படாததுமாக குற்றமுள்ள மனதுடன் ஒரு முத்தம் கொடுத்துவிட்டு ஒருவித ஆறுதலுடன் படுக்கச் சென்றான் பரமசிவம்.

# கீரைக்காரி

(ஸ்ரீ. ர. வேங்கடசாமி)

"என்ன பாட்டீ, கீரை எத்தனைக்கு வித்தாய்?"

"நாலரைத் துட்டுக்கப்பா—இதுக்காகத்தான் நேத்து காலமேயிருந்து பாடு" என்றாள் மாரக்காள்.

மாரக்காளுக்கு வயது ஐம்பதுக்கு மேலிருக்கலாம். விதவை. மேல் தோல் எல்லாம் சுருக்கம் விழுந்திருக்கிறது. கண்கள் ஒட்டிப் போயிருக்கின்றன. தலை பன்னாடை போலிருக்கிறது.

ஒரு நாள் விட்டு ஒரு நாள் மாரக்காள் ஒரு பெரிய கூடை நிறையக் கீரை கொண்டு வருவாள். அதை ஒன்றிரண்டு அணாக்களுக்கு விற்றுவிட்டு இரவு எங்கள் வீட்டில் வந்து படுத்திருந்து விட்டு விடியற்காலம் அவளது சொந்த ஊராகிய ஊஞ்சப் பாளையத்திக்குப் போவாள்.

"மாரக்காப் பாட்டீ, கொஞ்சம் சாப்பிடேன்" என்றால், "எனக்குப் படுக்க ஒரு மூலையில் எடங் கொடுத்தாப் போதும்; சோறு வேண்டாம்" என்று மறுத்து விடுவாள்.

ஈரோட்டிற்கும் ஊஞ்சப்பாளையத்திற்கும் ஆறு மைல். தள்ளாத வயதில் அவள் அவ்வளவு தூரம் நடந்து வந்து ஒண்ணரை அணா பெறுகிறாள்.

"காத்தாலே இங்கிருந்து போனன்னா முதலிலே கழி கௌரி தின்னு போட்டு கொஞ்சநேரம் படுத்துக்குவே. அப்புறம் போய் காடு காடா ரண்டு கீரை பொருச்சு கூடை நெறைய அமித்தி தண்ணி தெளுச்சு வெச்சுப் போடுவே. மறுநாள் காத்தாலே ராத்திரி உண்டதுபோக மிச்சமிருக்கிற கழித்தண்ணியெ ஒருவா குடிச்சுப்போட்டு இங்கே வருவேன்" என்று ஒருநாள் மாரக்காள் தனது தினசரி வேலையை என் தாயாரிடம் சொல்லிக் கொண்டிருந்தாள். அதைக் கேட்டது முதல் அவள்மேல் எனக்கு ஒருவிதப் பற்று ஏற்பட்டுவிட்டது. அவள் வந்தால் என்னிடம் இரண்டொரு வார்த்தை பேசாமல் தூங்கமாட்டாள்.

"பாட்டீ, இப்படி வேலை செய்வது உனக்கு கஷ்டமா யில்லையா?" என்று ஒரு நாள் கேட்டேன்.

"என்ன பண்ணரது? வயிறு வளர்க்க வேணுமே!" என்றாள் மாரக்காள்.

"இரண்டு நாளைக்கு ஒண்ணரை அணா போதுமா?"

"கிடச்சதைக் கொண்டு என்னமோ அரைக் கஞ்சி குடிச்சிக்கிட்டு எப்ப நல்ல காலம் வரும்னு இருக்கறே. எல்லாருக்கும் சாவு வருது; எனக்கு வரமாட்டேங்குது" என்றாள் மாரக்காள்.

"ஏம்பாட்டி, உனக்குச் சோறு போட பையன்கள் இல்லையா?"

நாங்கள் மங்கிய நிலவு வெளிச்சத்தில் வாசலில் உட்கார்ந்திருந்தோம். ஒருவர் முகம் ஒருவருக்கு நன்கு தெரியவில்லை. ஆனால் இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லும்போது மாரக்காளின் குரல் மாறுதலடைந்தது.

"இருந்தானப்பா. உன்னாட்டம் எட்டு வயசா இருக்கிறபோது, அவுங்க அப்பனுக்கு மலைக்காச்ச வந்து செத்துப்போயிட்டாரு. நான்தான் அவனை வளத்தி ஒரு ஆளாக்கினேன். கலியாணமும் மூச்சு வெச்சேன். என்னமோ எனக்குக் கஞ்சி ஊத்தாதே போனாலும் நல்லாப் பொழைப்பான்னு இருந்தே." மாரக்காள் குரல் கம்மலாயிற்று. அவள் மௌனம் சாதிக்கலானாள்.

"பாட்டீ, உன் மகன் சௌக்கியந்தானே?" என்று மெதுவாகக் கேட்டேன்.

"ஆரு கண்டா? அவன் எங்கிருக்கிறானோ! அவங்கிட்டேயிருந்து காயிதம் வந்து ஒரு வருசமாச்சு. செத்தானா பொழைச்சானான்னுகூடத் தெரியாது."

"என்ன பாட்டி ?"

"என்னமோ, கண்டி, பினுங்காம், அங்கே ஓடிப்போனுன். கட்டின பொண்டாட்டி யெக்கூட கவனிக்காமே போயிட்டான்" என்ருள்.

"ஏன் ஓடினுன் ?"

"கலியாணம் பண்ணிக்கிட்டு பணம் சம்பாரிக்கோனும்னு ஆசை. எனக்கு நாலுபடி நிலம் இருந்திச்சு. அது போதாதின்னு இங்கே ஆரோ வக்கல் ஐபரு வயலைப் பிடுச்சு குத்தகைக்கு உளுதான். அவனும் என்னென்னமோ பண்ணிப் பாத்தான். விலைவாசி எல்லாம்உளுந்துபோச்சு. குத்தகை பாக்கி நிண்ணு இரனூத்தம்பது ரூவா கடனுப் போச்சுது. ஐயரு வந்து புடுச்சு ஊடு காடு அல்லாத்தையும் ஏலத்திலே கொட்டிக்கிட்டுப் போயிட்டாரு. பணஞ் சம்பாரிக்கப் போயி இருந்ததும் போச்சு. உக்கார்ரதுக்கு வீடுமில்லே. மகன் நாலுநாள் எங்கியோ சுத்திக்கிட்டிருந்திட்டு ஒருநாள் ராத்திரி வந்தான். எங்கிட்ட பேசக்கூட இல்லெ. எனக்கு அப்பொ ஒண்ணுமே தெரியாது. பேசாதே வந்து சித்த நேரம் நிண்ணுக்கிட்டே இருந்தான். அப்புறம் அவன் பெண்டாட்டிகிட்டே சித்த நிண்ணுன். அவள் 'சாப்பிட வா'ன்னு சொன்னு. காதிலே கூட வாங்கிக்காமே போனவன் தானப்பா!" மாரக்காளுக்கு அதற்கு மேல் பேச முடியவில்லை. துக்கம் மார்பைப் பிளந்து விடும் போலிருந்தது.

கிழவியை மறு முறையும் பேசவிட்டால் மிகவும் வருத்த முறுவாள் என்றெண்ணி அவள் சொல்வதைத் தடுத்து சமாதானம் சொல்லலானேன்.

"பாட்டீ, இதற்காக ஒன்றும் வருத்தப் படாதே. அவனும் நீயும் ஒன்று சேர்ந்து சுகமா யிருப்பீர்கள். நான் சொல்வதை நம்பு" என்றேன். அவளும் "சின்னக் கொளந்தெ வாயிலே வர்ரது நெசமாத்தா இருக்கும்" என்று சொல்லிக் கொண்டே ஆறுதல் அடையலானுள்.

மாரக்காளுடைய தினசரி வேலைகள் சரிவர நடந்து வந்தது. ஒரு நாள் மாரக்காள் வீட்டுக்கு வரும்போது மிகவும் சந்தோஷத்தோடு வந்தாள். அவளுடைய முகம் ஆவலையும் காட்டிற்று.

"என்ன பாட்டீ, என்ன விசேஷம், முகத்திலே எண்ணைக்கு மில்லாத கெழுத்தி இண்ணைக்கு வீசுதே; கடிதம் ஏதாவது வந்ததா, அல்லது மகனே வந்துட்டானு?" என்று கேட்டேன்.

"கொளந்தெ தேவிலியே. நடந்ததெ நடந்தாப்பலே சொல்லியிடுச்சே!" என்று தனுக்குத்தானே சொல்லிக் கொண்டு, "ஆமாப்பா காயிதம் வந்திருக்குது; அதிலே என்ன எழுதியிருக்குதுன்னு சட்டுன்னு சொல்லு பார்க்கலாம்" என்று ஆத்திரப்பட்டுக் கேட்டாள் பாட்டி.

உடனே நான் அதை வாங்கிப் படித்து அவளுடைய மகன் கொளும்பில் இருப்பதாகவும் இன்னும் சிறிது நாளில் தன்னை வந்து கூட்டிக் கொண்டு போவதாகவும் எழுதி யிருந்ததைச் சொன்னேன். தற்பொழுது அவனுடைய உடம்பு சிறிது சுகமில்லாமல் இருப்பதால் வேலைக்குப் போக முடியவில்லை என்றும் கையிலே பணமும் இல்லை என்றும் எழுதி யிருந்தது. மாரக்காள் அதற்காகச் சிறிது வருத்தப் பட்டாளெனினும் சீக்கிரம் அவனைப் பார்க்கும் பாக்கியம் கிடைத்ததைப் பற்றி மிகவும் சந்தோஷப்பட்டாள். நான் சொன்னது உண்மையாய் விட்டதால் என்மேல் அவளுக்கு அபார நம்பிக்கை உண்டாயிற்று.

ஒரு வாரம், இரண்டு வாரம், மூன்று வாரம், ஒரு மாதமும் கழிந்தது. ஆனுல் மாரக்காளின் மகன் மாத்திரம் வந்தபாடில்லை. கடிதமும் வரவில்லை; அப்பொழுது மாரக்காளின் முகத்தைப் பார்ப்பதற்கு பரிதாபகரமாக இருந்தது. திடீரென்று அவளுக்கு ஒரு சந்தேகம் உண்டாயிற்று. கடிதத்தில் உடம்பு சௌக்கியமில்லை என்று எழுதி யிருந்தானே, ஏதாவது நோய் அதிகமாய் விட்டதோ என்று சந்தேகப்பட்டாள். சந்தேகம் வரவர அதிகமாயிற்று. அன்றிரவு படுத்தவள் அதையே நினைத்துக் கொண்டிருந்ததால் தூக்கத்தில் உளறலானுள்.

"ராமக்கா, எம்மவென், கொளும்பிலே இருக்கிறுன். அவனைப் போய்ப் பார்க்க வேணும். அஞ்சு ரூவா இருந்தாங் குடுக்கறயா?" என்று தூக்கத்திலே யாரையோ கேட்டாள்.

# "புஷ்பவனத்தின் சாரீரம்"

(ய. மகாலிங்க சாஸ்திரி, எம்.ஏ., பி. எல்.)

நான் எழுதிக் கொண்டிருக்கும்பொழுது, என் பாலிய நண்பர் ஒருவர் என்முன் தோன்றினர்.

"என்ன எப்ப பார்த்தாலும் ஏதாவது எழுதிக்கொண்டே இருக்காயே?" என்றார்.

நான் என் வியாஸத்தை மறைக்கும் முன், சட்டென்று அதை அவர் எடுத்துப் பிரித்துப் பார்த்தார். "ஒகோ! புஷ்பவனத்தைப் பற்றியா? சரி, சரி, நீ பின் யாரைப்பற்றி எழுதப்போகிறாய்!"

"ஏன் அப்படிச் சொல்கிறீர்? நான் யாரைப்பற்றி எழுதவில்லை? எழுதியும் இருக்கிறேன். இனியும் எழுதலாம்."

"இருக்கட்டும், புஷ்பவனத்திற்கு அதிகம் உருப்படிகள் பாடமில்லை என்று சொல்கிறார்களே!"

"ஆமாம், அவருக்கு நாற்பது ஐம்பது உருப்படிகள் தான் பாடமென்று கேள்வி. ஆனால் இதை ஒரு குறையாகச் சொல்வது தகாது. சற்று நிதானித்துப் பாருங்கள். ஸ்வரக் ஞானம், தாளக்ஞானங்களை சம்பாதித்துக் கொண்ட நல்ல சாரீர சம்பத்துள்ள ஓர் இளைஞன் கச்சேரி செய்ய ஆரம்பிக்கும் காலத்தில், இரண்டு மூன்று கச்சேரிகளுக்குப் போதுமான ஸாமக்கிரியைகளை மட்டும் தயாரித்துக் கொண்டு வெளிக் கிளம்புகிறான். ஆரம்பத்திலேயே, இருநூறு முன்னூறு கிருதிகளின் முஸ்தீப்புடன் தொடங்கவேண்டும் என்றால், அது சாத்தியமான காரியமல்ல. உருப்படிகள் போகப் போக சேகரிக்கப்பட்டு குவிந்து விடுகின்றன. இதுதான் அனுபவ சித்தம். புஷ்பவனம் அய்யர் பூராதிட்டமாகத் தன் ஆயுளை நடத்தியிருப்பாரேயானால் உருப்படிக் களஞ்சியமாக ஆயிருப்பார் என்பதை நாம் மறக்கக்கூடாது. மேலும், உருப்படிக் கணக்கைக் கொண்டா வித்வத்தை பரீக்ஷிப்பது? முன் காலத்து மகா வித்வான்களில் சிலர், ஒரு டஜன் உருப்படிக்கு மேல் பாடம் செய்யாதவர்களும் இருந்ததாகத் தெரிகிறது. சிலர் பல்லவியிலும், சிலர் ராகங்களிலும் "ஸ்பெஷலைஸ்" பண்ணினவர்கள். இதற்கு உதாரணம் குறிப்பிடத் தேவையில்லை. மேலும் புஷ்பவனம் அய்யர் பாட்டிற்கு மதிப்புரை கூறும் நாம் மற்றொரு வழியைப் பின்பற்றி ஆலோசிக்க வேண்டும். அவர் சில கீர்த்தனங்களையே பாடினாலும் கச்சிதமாகப் பாடினர். கிருதிகளைப் புதிதாக உயிர்ப்பித்துப் பாடினர், கேட்போர்க்குப் புளகாங்கிதமாகும்படிப் பாடினர். பாட்டு சீர் குலையாமல் பாடினர். உருவம் தந்துபாடினர். நான் அவரிடம் கேட்ட கீர்த்தனைகள் இன்னும் என் காதில் ஒலித்துக்கொண்டிருக்கின்றன. ஸம்ஸ்கிருதத்தில் ஒரு கவி சொன்னர்: "கர்ணம் கதம் சுஷ்யதி கர்ண ஏவ, ஸங்கீதகம் ஸைகதவாரி ரீத்யா": அதாவது காதில் விழுந்த ஸங்கீதம் மணலில் விழுந்த நீர் போல, அங்கேயே சோர்ந்து விடுகிறது. இது ஸாதாரண ஸங்கீதத்தைப்பற்றிச் சொன்னது. மற்றொரு ஸம்ஸ்கிருத கவி எழுதுகிறார்: "கச்சாமி ச்ருண்வன்னிவ". அதாவது கச்சேரியை விட்டு எழுந்துவந்த பின்னும் அந்த கானத்தைக் காதில் கேட்டுக் கொண்டே போகிறேன். இது ஜீவகலை வாய்ந்த சங்கீதத்தைப்பற்றி சொல்லப்பட்டது. நான் முதல் முதல் புஷ்பவனம் அய்யரின் கச்சேரியைக் கேட்டது சுமார் இருபத்தைந்து வருஷங்களுக்குமுன்,—"

"ஆமாம், இரு, எனக்குக் கூட ஞாபகம் இருக்கிறது. சுப்ரமண்ய ஐயராத்துக் கல்யாணத்தில் அல்லவா? நடந்தது. அன்று, தஞ்சாவூர் பக்கிரி மிருதங்கம்."

"ரொம்ப ஸரி. அப்ப உங்களுக்கும் ஞாபகம் இருக்கும் போலிருக்கே?"

"கச்சேரி நடந்த விஷயம் தான் எனக்குத் தெரியும்; ஆனால் நான் கேட்கவில்லை."

"ஏன் அப்படி? உங்களைக் கல்யாணத்திற்குக் கூப்பிட வில்லையா?"

"கூப்பிட்டிருந்தார்; நானும் சாயந்திரம், நான்கு மணிக்கு, கல்யாணம் விசாரிக்கப் போயிருந்தேன். எனக்கும் கச்சேரி கேட்க ஆசை தான். வெற்றிலைப் பாக்கு வாங்கிக் கொள்ளும் சமயத்தில், கச்சேரி செய்யப் போகிறவர்களும் வந்து உட்கார்ந்தார்கள். ஐயரவர்களும் என்னைப் பார்த்து, 'ஏன்...கச்சேரிக்கு இருந்துவிட்டுபோகலாமோன்னோ?' என்று கேட்டார். ஆனல், என்னைப்பிடித்த துரதிர்ஷ்டம், 'ஜோலியிருக்கு, அவஸரமாகப் போகவேண்டும்' என்ற வார்த்தைகள் வாய்க்கு

வந்துவிட்டன. ஏதோ பெரிய மனுஷன் என்று நினைத்துக்கொண்டு, வராட்டு ராங்கியாய் எழுந்து போய்விட்டேன். அது கிடக்கட்டும், உனக்கு அன்று கச்சேரி நடந்த விபரம், நன்றாக ஞாபகமிருக்கிறதா?''

"பேஷ், பேஷ், உம்முடைய போலி ஜெம்பத்தால் ஓர் அரிய கச்சேரியை அல்லவா இழந்துவிட்டீர்! போகட்டும், அன்று புஷ்பவனம் பாடின பாட்டுக்கள் வேண்டுமானால் சொல்கிறேன் கேளும்.

1. ஹம்ஸத்வனியில், ரகுநாயக
2. சுத்த ஸாவேரியில், தாரினி தெலுஸு கொண்டி
3. ஆபேரியில், நகுமோமுகனலேனி
4. தேவ காந்தாரியில், க்ஷீரஸாகரசயன
5. ஸ்ரீரஞ்சனியில், புவினி தாஸுடனே
6. குந்தளவராளியில், கலிநருலகு

இந்த ஆறுதான். ஆனால் வரிசைக்கிரமம் நிச்சயமாய் சொல்ல முடியாது.''

"பேஷ், பேஷ், நல்ல ஞாபகம்.''

"இது என் ஞாபக சக்தியின் விசேஷமேயல்ல. ஆனால், மணலில் இறைத்த நீர்போல சோர்ந்துபோகாத அந்த கானத்தின் விசேஷமே. சங்கீதத்தின் ஜீவகலையை அறிந்து, அதில் ஆத்ம சக்தியைப் புகட்டிப் பாடுபவர், நிழலைப் பிடித்துக்கொடுப்பது போலவும், மின்னலைக் கட்டிக்கொடுப்பது போலவும், தங்கள் கானத்தை கேட்போர் மனதில் பதியச் செய்து விடுகிறார்கள். இத்தன்மை வாய்ந்தது புஷ்பவனமையரின் கானம்.''

"என்ன சொன்னாலும், சிவன்வாள் மாதிரி ஆகுமா மற்றொரு கானம்?''

"இதென்ன வம்புக்கு இழுக்கும் யோசனையா? நான் எனக்குத் தெரிந்ததைச் சொல்ல பிரயத்தனப்படுகிறேன். நீரோ, ஏதாவது பேசவேண்டுமென்று பேசுவதாகத் தெரிகிறது. சிவன்வாளின் கானத்தைக் கேட்க, நீரும் நானும், இருபது வருஷத்திற்குமுன் பிறந்திருக்கவேண்டும். அதைப் பற்றிப்பேச நமக்கு என்ன அதிகாரம் இருக்கிறது?''

"இல்லை, நாம் நேரில் கேட்காத போனாலும் கேட்டவர்கள் கொண்டாடுவதை அறிவோமல்லவா? அந்த சாரீரம் அவருடன் போய் விட்டதென்றல்லவா சொல்கிறார்கள்.''

"இது வீண் ஐயம்பேட்டை வியாபாரமாகவல்லவா இருக்கிறது? விடமாட்டீர் போலும்! நானும், அவர் சாரீரம் வாத்யப் பெட்டி என்றும், மூன்று ஸ்தாயி சஞ்சாரமுள்ளதென்றும், அவருடைய முக்ய சிஷ்யரான ஓர் பெரியார் சொல்லக் கேட்டிருக்கிறேன். புஷ்பவனம் அய்யரின் சாரீரம் இவ்விரண்டு விஷயங்களிலும்அடுத்தபடியானதே. சாரீரத்தின் தன்மை சில அம்சங்களில் புல்லாங்குழல் நாதத்தை அனுஸரித்தது. சாரீரத்தின் வீச்சு, இரண்டரை ஸ்தாயி தான்.''

"நீ சொல்வது என்னமோ புதிதாக இருக்கிறது. புல்லாங்குழலின் தன்மை, சாரீரத்தில் இருக்கிறதென்றால், எனக்குப் புரியவில்லை.''

"தந்தி வாத்தியத்தைப் போன்றது ஸ்திரீ சாரீரம். வேணு நாதத்தைப் போன்றது புருஷ சாரீரம். மேலும் சுமார் இரண்டரை ஸ்தாயிகளில் தான், புல்லாங்குழல் பேசும். ஆனால் இதைக் குறித்து நான் சொல்லவில்லை. சாரீரங்களில் பல தோஷங்கள் உண்டு. சிலர் அனுநாஸிகமாகப் பாடுவார்கள். சிலருக்குக் குரல், மத்யஸ்தாயி கீழ் ஸ்தாயிகளில், ஒரு மாதிரியாய்ப் பருத்தும் கனமாகவும், கரகரவென்றும் இருக்கும். மேல் ஸ்தாயியில் மெலிந்து,போலித்வனியாகிவிடும். சிலர் சாரீரத்தில் கீழ் ஸ்தாயி ஸ்வரங்கள் காதில் விழாத ரகஸியமாய் இருக்கும். பஞ்சமத்திற்கு மேல் தான் ஸங்கீதம் காதில் படும். மேலும், உச்சஸ்தாயி ஸ்வரங்கள் கீச் சென்று போய்விடும். சிலருக்கு மத்தியம ஸ்தாயி ஒன்று தான், ச்ராவ்யமாக இருக்கும். கீழ் ஸ்தாயி ஸ்வரங்கள் காற்று சொரூபமாகவும், மேல் ஸ்தாயி ஸ்வரங்கள் எட்டாததால் ஸம்ஞை மாத்திரமாகவும் இருக்கும். சில சாரீரங்கள் கட்டுக்கடங்காமல் ஓடும். சில சாரீரங்கள் தள்ளினாலும் நகராது. சிலரிடம் நுனி நாக்கிலிருந்து ரவை உதிரும். சிலர் தாவாக்கட்டை அசைப்பில் ரவையை வைத்திருப்பார்கள். சிலர் ரவையை கண்டத்திலிருந்து கொப்பளிப்பார்கள். சிலரோ நாபியிலிருந்து கிளப்புவார்கள். சிலரிடம் கமகம் மணலைப் பிசைவதற்கொப்பாகும். சில வரணைக்ஷ சாரீரங்கள். சில விளக்கெண்ணெய் சாரீரங்கள். இவ்விரண்டு வகைகளிலும், கானத்தைச் சிறப்பிக்க இன்றியமையாததான "அனுரணனம்" என்ற தன்மை கிடையாது. அனுரணனம் என்பது தம்பூரா சுருதியில், ஜீவாசரியாக, அமைக்கப்பட்டபோது, மதுரமாக த்வனிக்கும், ஒருவித ரீங்காரநாத எழுச்சி; இந்த நாதம் இயற்கையாகவே, சில சாரீரங்களுக்கு அமைந்திருக்கும். சில சாரீரங்களில் உழைப்பினாலும், உற்பத்தி செய்துகொள்ளலாம். கம்மல் சாரீரங்களில் இதன் இன்பம் வெகுவாக அமைந்திருக்கும்.''

"என்ன ஒரே அடியாய் அடுக்கிக் கொண்டே போகிறாயே? நானும் பொறுத்துப் பார்த்தேன். புஷ்பவனத்தின் சாரீரத்தைப்பற்றி என்ன சொல்கிறாய்? சுருக்கமாய்ச் சொல்."

"நான் சொல்லியாகி விட்டதே! மேற்கூறியதில் யாதொரு தோஷமில்லாததும், மேற்கூறியபடி எல்லா குணங்களும் அமைந்ததும் புஷ்பவனத்தின் சாரீரம். கம்பீரமான புருஷ சாரீரம். சங்க த்வனிபோல கண்டம், நிரம்ப த்வனி கொடுத்துப் பாடுவார். புல்லாங்குழலில் மந்தா ஸ்தாயியில் வாசித்தல் எவ்விதமோ அவ்விதமே, அவருடைய மந்தரஸ்தாயிகானம் காதுகளை நிறப்பி ஆனந்தம் அளிக்கும். அதே மாதிரி தாரஸ்தாயியிலும், குரல் சிறுக்காமல், முழு ஆண்மையுடன் திடமாகவும், தேசல் பொய்க்குரல் என்ற பேச்சில்லாமலும் மனோகரமாயும் இருக்கும். சாரீரத்தின் 2½ ஸ்தாயி வீச்சிலும் ஒரே பிரமாணம், ஒரேவித ரக்தியுள்ள த்வனி, ஒரே விதமான ரவை கமகங்களுக்கு வசதி இவைகள் அமைந்திருக்கும். பாடும்போது சரீரத்திலோ, முகத்திலோ கோணல்களே ஏற்படமாட்டா. ரவைகள் பேசும்போது இரண்டு விரல்களை மட்டும் அசைத்துக் காண்பிப்பார். அவர் ரவைகளை அகாரங்களாய்ப் பாடுவார். தோம், போம், யா, ரா, ஈ, ஊ, முதலியது ஒன்றும் வராது. எல்லாம் அகாரந்தான். அந்த அகாரம் வெட்டி வெட்டிப் பேசும்."

"மடாத்தவளைக்குப் பேசுகிறது போலவா?"

"நீர் பரிகாசமாய்ச் சொன்னாலும் உம் உபமானம் தவறன்று. தவளைக்குப் பேசுவது போல், ஒரு மதுரமான கண்டத்தில், அகார வரிசைகள் பேசி அதில் காம்போஜி ராகத்தையும் பாடினால், அதை நீர் தவளைக் கத்தல் என்று தான் சொல்லுவீரா?"

"அதிருக்கட்டும், கோபித்துக்கொள்ளாதே. நீ காம்போஜி ராகத்தை உதாரணமாய் எடுத்ததற்கு காரணம் என்ன? அவர் வெகுவாகக் காம்போஜி ராகம் தான் பாடுவார் என்று கேழ்விப்பட்டிருக்கிறேன்."

"தன் சாரீரத்திற்கு எது பாடினால் நன்றாயிருக்கும் என்ற சூக்ஷ்மம் தெரிந்தவர். அவர் அதிகமாகக் கச்சேரியில் பாடக்கூடிய ராகங்கள் பின்வருவன: முகாரி, பிலஹரி, காம்போஜி, தேவகாந்தாரி, சுத்த சாவேரி, குந்தளவராளி. இந்த ராகங்களுக்கு பொதுவான தர்மம் என்ன தெரிகிறதா? ஆரோஹணத்தில், நிஷாதம் இல்லை. அந்த சாரீரத்தில், தாய, என்று வெட்டிப்பாடும் அழகு வேறு எந்தச் சாரீரத்திலும் காண முடியாது."

"ஸங்கீதம் கமகம் கார்வைகளினால் ரஞ்சிக்கச் செய்வதேயன்றி ரவை ஜாதிகளினால் இல்லை என்று பெரியோர் சொல்லக் கேட்டிருக்கிறேன். நீ சொல்வதைப் பார்த்தால் ஸங்கீதம், தகரப் பெட்டியில் கூழாங்கல்லைப் போட்டு குலுக்குவது போல் இருக்கவேண்டும் என்றல்லவா ஏற்படுகிறது."

"நான் முடிப்பதற்கு முன் நீங்கள் பேசி விடுகிறீர்கள். புஷ்பவனத்தின் சாரீரத்தில் சங்கதிகள் எப்படி உருண்டு திரண்டு கலகலவென்று, நக்ஷத்திரம்போல், உதிருமோ அப்படியே வெகு நறுக்காகவும், இயற்கையாகவும், கமகங்கள் பேசும். அவர் கமகங்களுக்காக, பொம்மலாட்ட பொம்மை மாதிரி, தலையை ஆட்டுவதில்லை. மேலும் கார்வையைப் பற்றிச் சொன்னீர்களே அது முக்கியமான விஷயம். புஷ்பவனம் அய்யர் மேல் ஷட்ஜத்தில் கார்வை கொடுப்பதற்கும், பியாரி ஸாஹேப் பஞ்சமத்தில் கார்வை கொடுப்பதற்கும், நாம் ஸம்மானம் செய்வதானால், இந்த உலகம் போதாது. விச்வாமித்ரரைக் கூப்பிட்டு இன்னும் பல உலகங்களை சிருஷ்டிக்கச் சொல்லவேண்டும்."

"ஸரி, எல்லாவற்றையும் கொடுத்துவிடு, ஸ்வர்க்கலோகத்தையும் வேண்டுமானால் சாஸனம் செய்துவிடு. அது எப்படியாவது தொலையட்டும், நீ வாக்,......கீக்கு,...க்கு வரப்போகிறாயா இல்லையா? என்னை இவ்வளவு நாழியாய் அனாவசியமாய் மெனக்கடுத்திவிட்டாய்."

"ஓய், யார் பேரில் அபவாதம் சொல்கிறீர். உம்மை யார் கோணக் கக்ஷி எல்லாம் பேசச் சொன்னது? நான் எழுதவாரம்பித்த முக்கியமான விஷயம், உம் அட்டஹாஸத்தில், எங்கேயோ மறந்து போய்விட்டது. நீர் வாக் போய்விட்டு வாரும். நான் இப்போது இதை எழுதி முடித்தாக வேண்டும்."

என் நண்பர் "ஆஹா, நடக்கட்டும், விஸ்தாரமாய் நடக்கட்டும். நாளை முதற் கொண்டு உன்னை என் வாக்குக்குக் கூப்பிடுகிறேன்" என்று முகத்தைச் சுளித்துக்கொண்டே கூறிவிட்டுத் தன் வழி நடந்தார். என் வாக் என்னிடமிருக்கட்டும், உம் வாக் உம்மிடமே இருக்கட்டும் என்று மனதில் நினைத்துக் கொண்டு மேலே எழுதலானேன்.

மேற்கூறிய பல குறிகளிலிருந்தே புஷ்பவனம்அய்யர் கச்சேரி பிளான் சிறிது வெளியாயிருக்கும். அவர் ஐந்தாறு கீர்த்தனைகள் தான்


பாடுவது வழக்கம். கீர்த்தனத்திற்கு முன் ராகமும், நடுவே, நிரவல்ஸ்வர வரிசைகளும், பாடாமல் இருப்பதில்லை. நான் முதல் முதல் கேட்ட கச்சேரியில் மேற்கூறிய ஆறு ராகங் களையும், இனி இப்படி யார் பாடிக் கேட்கப்போகிறோம் என்று நினைக்கும்படி பாடினார். ஆபேரியையும், குந்தளவராளியையும் அன்று தான் நான் முதல்முதல் அறிந்து கொண்டது. கன ராகத்திற்குப் பிறகு தகநம் கண்டிப்பாய்ப் பாடுவார். பிறகு சம்பிரதாயப்படி மூன்று காலம் பல்லவி. துக்கடாக்கள் அதிகம் கிடையாது. ஆனால் அவர் பாடிய தாரதில்லானா முதலிய துக்கடாக்களை ஒரு தரம் கேட்பவன் அவன் ஆயுள் பரியந்தம் மறக்கமுடியாது. கடைசியில் ராகமாலிகை நிச்சயமாய் உண்டு. அதில் பிலஹரி, முகாரி முதலான "பேடண்டு" ராகங்களை மறக்க மாட்டார். அவர் மறந்தாலும் சபையோர்கள் ஞாபகப்படுத்தி விடுவார்கள். சில உருப்படிகளைத் திருப்பித் திருப்பி, கேட்பதற்காகவே, அவருடைய கச்சேரிகளை விடாமல் ஸங்கீத ரஸிகர்கள், "அட்டெண்டு" பண்ணுவார்கள். புஷ்பவனம் அய்யர் கனராகத்தை அரை மணிக்குக் கொண்டுவந்து விட்டார். அதற்கு முன் வித்வான்கள் ராகங்களை மணிக் கணக்காய்ப் பாடுவார்களாம். சீனுவையங்கார், வைத்தியநாதய்யர் இவர்கள், கனராகத்தை ஒரு மணிக்குக் குறையாமல் பாடுவார்கள். அந்த ராகங்கள், புஷ்பவனமையர் ஏற்படுத்திய திட்டத்திற்கும் இப்பொழுது வழியில்லாமல், ஒருபக்கம் கீர்த்தனைப் படைகளுக்கும், மற்றொருபக்கம் துக்கடாப் படைகளுக்கும், நடுவே அகப்பட்டுக்கொண்டு தத்தளிக்கின்றன. ராகத்திற்கே இந்த கதியானால் பல்லவியின் பேச்சையே நாம் இங்கு எடுக்க வேண்டாம். இதெல்லாம் மஹாஜனங்களின், மனோபாவத்தை மேற்கொண்டு மாறி வருவதால், பாடகர்களைச் சொல்லிப் பயனில்லை. புஷ்பவனம் அய்யர் கீர்த்தனம் பாடும் அழகே வர்ணிக்கத் தகுந்தது. அவர் பாடுவதோ அநேகமாய்ப் பெரிய கிருதிகள், எடுப்பது சவுககாலம், கொடுக்கும் சங்கதிகளோ, அடுக்காகவும் கலகலவென்று உருண்டும் வரும். ரவையுடையனவாயும், ஒதுக்குச் செதுக்கங்களின் இழைப்புள்ளனவாயும், ராக பாவத்தை ஒட்டினதும், சுக பாவத்தை வர்ஷிப்பதுமான, கல்பனுவழிகளில் அமைக்கப்பட்டனவாயும் இருக்கும். இவ்விதம் அவர் தன் மனோபாவங்களால் அலங்கரித்து அடிக்கடி மகிழ்ந்து பாடிய கிருதிகளில் க்ஷீரஸாகரசயன, தாரினி, நகுமோ, முதலியன முக்கியமானவை. என் நண்பர் இப்பொழுது என்முன் இருந்தால் என்னை ஒரு மடக்கு மடக்காமல் விட்டிருக்கமாட்டார். நல்ல வேளை தப்பினேன். ஸம்ஸ்கிருத கவிகள் சிலருக்கு சவுகைப் பெயர்கள் உண்டு. தீபசிகா காளிதாஸன், ச்சத்ரபாரவி, கண்டாமாகன், என்றவாறு. அதுபோல புஷ்பவனத்திற்கு, தாரகநாம புஷ்பவனம் என்று ஒரு பெயர் வழங்கிற்று. க்ஷீரஸாகர என்ற கீர்த்தனத்தில், சரணத்தில், "தாரக நாம, த்யாகராஜநுத" என்று பாடும்போது, அவரது சாரீரத்தின் தாரஸ்தாயி வன்மையை கண்டு மகிழ்ந்தவர்கள் அவருக்கு இட்ட பெயர் இப்பெயர். அவர் முடிவில் இரண்டொரு வருஷம் க்ஷயத்துடன் போராடிக்கொண்டிருக்கையில், தன் ஆப்த நண்பரிடம். "நான் ஸங்கீதத்தை விட்டுவிட்டுப் போகிறேனே!" என்று வருத்தப்பட்டாராம். அந்த ஆர்வமே அவர் ஸங்கீதத்தைச் சிறப்பிக்கச் செய்ததென்று நாம் தெரிந்துகொள்ள வேண்டியது.

---

## ஆசிரியர் அறிக்கை

முக்கியமாக கிராமப் புனருத்தாரணத்தைப் பற்றியும், பொதுவாக ஸ்தல ஸ்தாபன, ரோட்டு, ரயில் சௌகரியா சௌகரியங்களைப் பற்றியும், நேயர்கள் தங்களுக்குத் தோன்றும் ஆலோசனைகளை நமக்குச் சுருக்கமாக எழுதி அனுப்புமாறு கோருகிறோம். அந்த யோசனை நமது சமூக வாழ்வின் எந்த அம்சத்தைக் குறித்தாகிலும் இருக்கலாம்; தனி நபரைக் குறித்துமட்டும் இருக்கக் கூடாது.

ஆசிரியர்




# ஒரு புதுக் காவியம்

ஸம்ஸ்கிருதத்தில் தூத காவியங்கள் என்று சொல்லப்பட்டவை சுமார் 80 வரையில் கணக்கிடப்பட்டிருக்கின்றன. அவையெல்லாம் அனேகமாக மகாகவி காளிதாஸன் செய்த "மேக தூத"த்தின் கருத்தையும் பாணியையும் தழுவி எழுதப்பட்டவை. தலைவியை விட்டுப் பிரிந்த தலைவன் அவளுக்கு மேகத்தாலோ, அன்னத்தாலோ, வண்டாலோ, தன்னைப் பற்றிச் செய்தியனுப்பி அவள் கவலையையும் சோகத்தையும் நீக்க முயலுவதே தூத காவியங்களின் பொருள். இவ்வகையான காவியங்களில் இதுவரை வெளிவராத "ப்ருங்க தூதம்" என்னும் சிறு கிரந்தத்தை நாக்பூர் ஸர்வ கலாசாலைப் பத்திரிகையில் புரொபஸர் எஸ். பி. சதுர்வேதி என்பவர் பிரசுரித்திருக்கிறார். அது 'மந்தாக்ராந்த' விருத்தத்தில் அமைக்கப்பட்ட 126 சுலோகங்கள் உள்ளது. நடை, கோர்வை, பாவங்களின் தொகுப்பு இவைகளில் "மேக தூத"த்தையே அனுசரித்திருப்பினும், இரண்டு விஷயங்களில் அது வேறு பட்டிருப்பது குறிக்கத்தக்கது. ராமகிரியில் ஆரம்பித்து அளகாபுரிக்குப் போகும் நெடுந்தூரத்தை வர்ணிக்கும் மேகதூதம் போலல்லாமல், வ்ரஜபூமி என்னும் புண்ணிய க்ஷேத்திரத்திலேயே இந்தக் காவியத்தில் தூது செல்லும் வண்டானது உலாவுகிறது. கவியும் அந்த பூமியின் அழகையும் அதிசயங்களையுமே பலவிதமாய் வர்ணிக்கிறார். தவிர, இந்தக் காவியத்தில் தூதனுப்புபவர் கேவலம் மனுஷ்யனல்ல, ஈசுவராம்சம். அவர் காதலும் தெய்வீகத் தன்மையுள்ளதே. ஆகையால் இந்தக் காவியம் சிறந்த பக்திக்குச் சாதனமாயிருக்கின்றது.

இதை எழுதினவர் பெயர் ஸ்ரீ சதாவதான கிருஷ்ணதேவர் என்று ஊகிக்கப்படுகிறது. இவர் காலம் நிச்சயமாகத் தெரியவில்லை. இதற்குள்ள ஒரே ஏட்டுப் பிரதி கி. பி. 1696-ல் எழுதப்பட்டதால் அதற்கு முன் இந்தக் காவியம் இயற்றப்பட்டிருக்கவேண்டும் என்று மட்டும்தான் நிச்சயமாய்ச் சொல்லமுடியும். கவியும் நற்காலம் ஐக்கிய மாகாணங்கள் என்று வழங்கி வரும் பிரதேசத்தின் மேற்கு பாரிசத்தில் வசித்தவராகத் தோன்றுகிறது.

இந்த "ப்ருங்க தூத"த்தைத்தவிர, வண்டைத் தூதாகக் கொண்ட நான்கு காவியங்கள் உண்டு. அவை, கோழிக்கோட்டில் அரசு புரிந்த கோதவர்ம ராஜாவின் ஆஸ்தான வித்வானான வாஸுதேவரின் 'ப்ருங்கஸந்தேசம்', ருத்திர நியாய வாசஸ்பதி என்ற தார்க்கிகரால் இயற்றப்பட்ட 'ப்ரமர தூதம்'. ஆசிரியர் பெயர் தெரியாத இன்னொரு 'ப்ருங்கஸந்தேசம்' (—இது மலையாளத்திலுள்ள சிவபுரமென்னும் திருச்சூருக்குத் தூது அனுப்புவதை வர்ணிக்கிறது); கங்கானந்தகவீந்திரர் செய்த 'ப்ருங்க தூதம்'— ஆக நான்கு.

# சமாதானத்திற்கு வழி

நமது நாகரீகமும் கலைகளும் நாசமாகிக் கொண்டு வரும் உலகத்தில் நாம் இப்போது வசிக்கிறோம். நமது மனத்தைக் குழப்பும் முறணான கொள்கைகளும், உலக நாகரீகம் அழிந்து போகுமோ என்ற பயமும் நம்மை வாட்டுகின்றன. இயற்கையை ஜெயித்த நமக்குப் பலவசதிகள் உள்ளன. ஆனல் நிரம்ப இருந்தும், ஆண் பெண்கள் உண்ண உணவின்றியும், உடுக்க உடையின்றியும் வாடுகிறார்கள் மனிதர்கள் பசியால் வாடும்போது, உணவுப் பொருள்கள் வருஷா வருஷம் அழிக்கப்படுகின்றன. உடுக்க ஆடையில்லை; ஆனல் மில்கள் மூடப்பட் டிருக்கின்றன. யுத்தம் வந்தால் தாக்கப்படும் தேசத்திற்கு மட்டும் அபாயமல்ல. தாக்கும் தேசத்திற்கும் அபாயம் தான். சகலமும் நாசம் என்று நன்றாகத் தெரிந்திருந்த போதிலும் கூட, தேசங்கள் குரோதபாவத்துடன் தான் நடந்து கொள்கின்றன. சுருக்கமாகச் சொல்லப் போனல், எல்லோருக்கும் பைத்தியம் பிடித்து, பயம், குழப்பம் இவைகளில் சிக்குண்டு திண்டாடுகிறார்களென்று தோன்றுகிறது.

மகாயுத்தம் எல்லோருக்கும் ஓர் கலக்கத்தை உண்டு பண்ணி ஆத்மீக உணர்ச்சியைக் கிளறி விட்டது. கௌரவத்திற்காகவும், நியாயத்திற்காகவும், சுயேச்சைக்காகவும் போராடவேண்டுமென்று இளைஞர்களுக்குக் கூறப்பட்டது. ஜனங்கள் அதை யுத்தத்தை ஒழிப்பதற்காகச் செய்யப்படும் யுத்தம் என்று நம்பினர்கள். அநியாயத்தையும் பலாத்காரத்தையும் எதிர்த்துச் சண்டை போடுவதாக எண்ணினர்கள். ஆனல் யுத்தம் முடிந்ததும், சமாதானம் உண்டாகும் என்ற நம்பிக்கையைக் கூடக் கொடுக்காத 'சமாதானத்தைப்' பெற்றார்கள்.

இப்படித் தற்காப்புக்காகப் போர் செய்வதாயிருந்தால், இப்படி ஒவ்வொருவரும் நியாயத்திற்காகவும் உண்மைக்காகவும் சண்டை போடுவதாயிருந்தால், என் தான் கோரமுள்ள யுத்தம் நிகழ்கிறது? இந்தக் கேள்வி ஒவ்வொரு இளைஞனின் மனதிலும் இப்போது எழுகின்றது. ஆனல் பதில் இதோ இருக்கிறது. இந்த யுத்தம், ஒரு நாட்டாரை வென்று அடிமைப்படுத்தி விட வேண்டு மென்ற காரணத்தால் உண்டாகிறது. எதற்காக அடிமைப் படுத்த வேண்டும்? பொருளாதார ஆசைகளும், சுரண்ட வேண்டுமென்ற புத்தியும்தான் காரணங்கள். தேசீய உணர்ச்சிகளும், ஜாதி பத்திய கர்வமும் இந்தச் சண்டைகளுக்குக் காரணம். ஆனல் மூலாதாரமான காரணத்தைக் கண்டுபிடிக்க வேண்டுமானல் பொருளாதாரப் பிரச்னைக்குப் போக வேண்டும். துர்ப்பாக்கியமற்ற தேசத்தினரைச் சுரண்டித் 'தன்' தேசத்தினரின் வாழ்க்கை நிலையை உயர்த்திக்கொள்ள வேண்டும் என்ற ஆசை தான் யுத்தங்களுக்கும் மனித சமூகத்தின் கஷ்டங்களுக்கும் காரணமாகும்.

சுயேச்சை முன்னேற்றத்திற்கு மிகவும் அவசியமானது. அதைப்பற்றி மட்டுமல்லாமல் நாம் புதிய சமுதாய முறையைப் பற்றியும் சிந்திக்கவேண்டும். அந்த சமுதாயத்தில் பிறப்பு, ஐசுவர்யம் இவைகள் மனித சகோதரத்துவத்தைப் பற்றியும், அடிப்படையான ஒற்றுமையைப் பற்றியும் நாம் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தைக் கெடுக்கக் கூடியதாயிருக்கக் கூடாது. உலகம் முழுவதிலும் சுயேச்சையும், முன்னேற்றமும் இருந்தால் தான் பிரயோஜன முண்டு.

ஆகவே, நாம் சமுதாயத்தின் மூலத்தையே மாற்றியமைக்க வேண்டும். மனிதனுக்கும் மனிதனுக்கும் உள்ள சம்பந்தத்தை மாற்றி அதே கொள்கைப்படி ஒரு வகுப்பிற்கும், மற்றொரு வகுப்பிற்கும் ஒரு தேசத்திற்கும், மற்றொரு தேசத்திற்கும் உள்ள சம்பந்தத்தைத் திருத்தியமைக்க வேண்டும். அப்படிச் செய்தால் தான் உலகில் சமாதானம் நிலவும்.

—புரொபெஸர் ஹுமாயூன் கபீர்

# பாத்திரங்களால் ஆகாரம் கெடுகிறது

சென்னை சர்க்கார் கீழ்க்கண்ட அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்கள் :—

நம் வீடுகளில், ஆகாரங்களை வைப்பதற்கும், தயார் செய்வதற்கும், மண் பாத்திரங்கள், கல்சட்டிகள், பீங்கான்கள், எனமல் பாத்திரங்கள், கண்ணாடிப் பாத்திரங்கள், உலோகப் பாத்திரங்கள் முதலியன உபயோகப்படுகின்றன. மண் பாத்திரம் விலை குறைவாக இருப்பதோடுகூட ஆரோக்கியத்துக்கு மிக்க

ஏற்றதாகவும் இருக்கிறது. மண் பாத்திரங்களை உடையாமல் பார்த்துக்கொள்ளுவது தான் கஷ்டம். அவைகளை உபயோகப்படுத்துவதற்கு முன்பு நன்ருகச் சுத்தம் செய்து, நல்ல காற்றும், சூரிய வெளிச்சமும், படும்படியாக வைக்கவேண்டும்.

பீங்கான் பாத்திரங்கள் அடுப்பில் வைப்பதற்கு ஏற்றவையல்ல. ஏனுமல் பாத்திரங்களில் விலையுயர்ந்த ரகங்களைத் தான் உபயோகப்படுத்தவேண்டும். இந்தப் பாத்திரங்களில், மழமழவென்று இருக்கும் வெளிப்பாகங்களில் ஒரு விதமான விஷ பதார்த்தம் இருப்பதால், அவைகள் பல் நோவுகளை உண்டாக்குகின்றன. கண்ணுடிப் பாத்திரங்கள் நமக்குத் தகுந்தவையல்ல.

கூடிய வரையில், உலோகப் பாத்திரங்கள் உபயோகிப்பதைக் குறைக்கவேண்டும். உலோகங்களில் காற்றும் தண்ணீரும் பட்டால் அவற்றின் சிறு அணுக்கள் வேறு சில வஸ்துக்களாக மாறுகின்றன. அவைகள் ஆகாரத்துடன் சுலபமாகக் கலந்து அசுசி ஆக்குகின்றன. இதுவும் தவிர சமையல் செய்யும்போது இந்த உலோகங்களே, அவைகளுக்குள்ளிருக்கும் ஆகாரத்துடன் கலந்து தேகாரோக்கியத்தைக் குலைக்கின்றன. இருந்தாலும் உலோகப் பாத்திரங்களை 'பளபள'வென்று தேய்த்து உபயோகித்தால் அவ்வளவு கெடுதி இல்லை. சமையலுக்கு அடுப்பில் வைப்பதற்கு முன் மண்ணையோ, கஞ்சிப்பசையையோ பூசுவதும், முதலில் புளி தடவிப் பிறகு சாம்பலால் தேய்த்துச் சுத்தம் செய்வதுமான தென்னிந்தியருடைய வழக்கங்கள், விஞ்ஞான சாஸ்திரோக்தமானவைகளே; அந்தப் பழக்கங்களை அநுஷ்டிக்க வேண்டும்.

எல்லா உலோகப் பாத்திரங்களைக் காட்டிலும் ஈயப் பாத்திரங்கள் மிகவும் கெடுதல். உபயோகப்படுத்தவே கூடாது. இவை வெள்ளீயத்தினுல் செய்யப்பட்டதென்றிருந்த போதிலும், அவற்றிலிருக்கும் ஈய உப்புகள் விஷப் பதார்த்தங்கள். ஈயப் பாத்திரங்களில் செய்த ரஸம் சாம்பார் முதலியவைகள், ருசியாக இருந்தபோதிலும் அவைகளுடன் சேர்ந்த ஈய உப்புக்கள் உடம்புக்குக் கெடுதல். அவைகள் கொஞ்சம் கொஞ்சமாக நமது தேகத்தினுள் சேர்ந்து, கடைசியில் அவையவங்களின் சில பாகங்களில் தங்கி, ரத்தமின்மை மலச்சிக்கல், வயிற்றுவலி, முதலிய வியாதிகளை உண்டாக்குகின்றன. செம்பு, பித்தளை, வெள்ளீயப் பாத்திரங்களை சுத்தமாக வைத்துக்கொண்டால், தண்ணீர் வைப்பதற்கு உபயோகிக்கலாம். செம்பும் பித்தளையும் சமையலுக்கு ஏற்றதல்ல. செம்பில் பால் காய்ச்சினுல் பாலின் ருசி கெட்டு, அதன் 'வைடமின் ஏ' சிறிதளவு குறைகிறது. சாதம் சமைக்க உபயோகிக்கும் பித்தளைப் பாத்திரங்களுக்கு வெள்ளீயப் பூச்சுப் பூசவேண்டும். பூச்சுக்கு வெள்ளீயத்தில் ஈயமில்லாமல் இருக்கவேண்டும். அந்த பூச்சு நன்ருகக் குலைந்து போவதற்குள் அடிக்கடி பூசவேண்டும். அப்படிப் பூசாவிட்டால் பூச்சுப் போன இடங்களிலிருந்து உலோகம் ஆகாரத்துடன் கலக்கிறது. கலாய் பூசுகிறவர்கள், தங்கள் செலவைக் குறைப்பதற்காக வெள்ளீயத்துடன், விஷ குணமுள்ள ஈயத்தையோ, துத்துநாகத்தையோ அல்லது இரண்டையுமோ உபயோகிக்கிருர்கள். ஆகவே இவர்களை அவர்களிடமிருக்கும் 'வெள்ளீயத்தை' உபயோகப்படுத்த விடக்கூடாது.

தண்ணீரையும் பாலையும் காய்ச்சுவதற்கு அலுமினியப் பாத்திரங்களை உபயோகிக்கலாம். சாதாரணமாக எல்லாவற்றைக் காட்டிலும், அலுமினியம் தான் குறைந்த விஷ குணமுள்ளது.

# கிராமப் புனருத்தாரணத்தின் நோக்கம்

கிராமப் புனருத்தாரண வேலைக்கு நான்கு நோக்கங்கள் தான் இருக்க முடியும். கிராமத்தாரின் பொருளாதார நிலையை உயர்த்துவது கல்வி அளிப்பது, சுகாதார வைத்திய வசதி அளிப்பது, வாழ்க்கையை இன்னும் கொஞ்சம் ஸ்வராஸ்யமுள்ளதாகச் செய்வது.

பயிர் பச்சைகளுடைய செழிப்பையும் விளைச்சலையும் அதிகப்படுத்தினுல் கிராமத்தானின் செல்வ நிலை சரியாகி விடுமா என்பது பொருளாதார நிபுணன் சொல்ல வேண்டிய விஷயம்.

கிராம வாசிகளுக்கு எழுதப் படிக்கச் சொல்லிக் கொடுப்பதற்கும், அறிவு வளர்வதற்குக் கொஞ்சம் பொது கல்வி அளிப்பதற்கும் கிராமப் பள்ளிக்கூடங்கள் எங்கு பார்த்தாலும் ஆரம்பமாகவேண்டும்.

வைத்தியப் பரிட்சையில் தேறினவர்கள் கிராமங்களுக்குச் சென்று வசிப்பதற்குத் தூண்டுதலாக ஏதாவது செய்யவேண்டும். அப்பொழுது தான் கிராம வாசிகளுக்கு வைத்திய வசதிகள் ஏற்படும்.

கிராமத்தானுக்கு வாழ்க்கையில் இன்னும் அதிகமாக ருசி ஏற்படும்படி செய்யவேண்டும்.

ஸர். டி. விஜயராகவாச்சாரி.

# உதிர்ந்த :: :: மணிகள்

*

மகாத்மா காந்தி வறுமையைக் களைய, பொருள்கள் மீது கவனத்தைச் செலுத்த வில்லை; மனுஷன் மீது கவனத்தைச் செலுத்துகிறார். புதிய இயந்திரங்களைப் பற்றியும், முதலைப்பற்றியும், நிர்வாகத்தைப்பற்றியும், விற்பனை போன்ற விஷயங்களைப்பற்றியும் அவர் கவலைப்பட வில்லை.

நம்மைப்போன்ற பல்லாயிரக் கணக்கான உபயோகமுள்ள மனிதர்கள், வேலை செய்ய இஷ்டப்பட்டும் வேலையில்லாமலிருப்பதைப் பார்த்தார். உழைப்பு சரியான காலத்தில் உபயோகிக்கப்படாவிட்டால் அழிந்துபோன சாமானாகிவிடுகிறது என்ற பொருளாதார உண்மையை உணர்ந்தார். அப்படியில்லாமல், உழைப்பைச் சரியானபடி ஒரு மணியோ அல்லது ஒரு வருஷமோ உபயோகித்துக் கொண்டால் நிச்சயம் பலன் கொடுக்கக் கூடியது. இந்தக் கருத்தைக்கொண்டு தான் மகாத்மா காந்தி 'கதர்' திட்டத்தை வகுத்தார்.

—ஸ்ரீ. மனு சுபேதார், எம்.எல்.ஏ.

*  *  *

அரசாங்கங்களை, காற்று, திரவம், திடப்பொருள் இவைகளுடன் ஒப்பிடலாம். சர்வாதிகார அரசியல்தான் காற்று ரூபமானது. காற்றுக்குத் தனியாக ஸ்வரூபமில்லை, ஒற்றுமை இல்லை, உருவமில்லை. ஆனால், கால்பந்தில் காற்றை அடைத்தால், அதற்கு ஒரு உருவமும் பலமும்உண்டு. அதுபோலவே, சர்வாதிகார நாடுகள், ஜனங்களை ஒன்று சேர்த்துப் பயிற்சி கொடுத்துச் சர்வாதிகாரத்துவம் என்ற சுவற்றுக்குள் அடைத்திருப்பதால் பலம் பெற்றிருக்கின்றன.

திரவரூபமான அரசாங்கத்தில் கொஞ்சம் சுயேச்சையும் கொஞ்சம் தடங்கல்களும் உண்டு. பாத்திரத்தில் ஊற்றின தண்ணீருக்கு ஸ்வரூபம் இருக்கிறது. ஆனால் எந்த நேரத்திலும் வெளிசாமான்கள் உட்புகக்கூடிய அபாயம் உண்டு.

மிகவும் விரும்பத்தக்க அரசாங்கம் திடப்பொருள் ரூபமான அரசாங்கம் தான். அந்த ரூபம் தானாகவே உண்டானது; வேறொருவரால் உண்டாக்கப் பட்டதல்ல. அந்த ரூபத்தின் ஒவ்வொரு அணுவுக்கும் பிடிப்பு உண்டு. ஐக்கிய பாவம், சேவை, அந்நியோந்நியம், கூட்டுறவு இவைகளை அடைந்தால்தான் திடரூபமான அரசாங்கம் உண்டாகும்.

—ஸ்ரீ. ஸி. ராஜகோபாலாச்சாரியார்.

*  *  *

"படித்த வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு சிகிச்சை படிப்பவர்களின் தொகையைக் குறைப்பதல்ல. ஆனால், வியாபாரம், தொழில், இவைகளை வளர்ப்பதுதான். படித்து வேலையில்லாவிட்டால் இப்போது இருக்கும் சமூக முறையின் பேரில் வெறுப்பும், அதிருப்தியும் ஏற்படுவது இயற்கை. இந்த நிலையைச் சீர்திருத்துவதுதான் சர்க்காரின் அதிமுக்கியமான கடமை."

—ஸர் ஷா ஸுலைமான்.

*  *  *

ஜெர்மனியில் நடக்கும் மிருகத்தனத்தை நாம் கண்டிப்பதற்கு ஓர் நல்ல வழி நம்மிடமுள்ள மிருகத்தனத்தைக் களைந்து கொள்வது தான்.

—சென்னை பிஷப்